# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**செப்டம்பர் 2009 ஜீவியம் 15 மலர் 5**

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| வாழ்வில் பெருவெற்றி பெற்றவர்கள் | 3 |
| சாவித்ரி | 6 |
| லைப் டிவைன் | 8 |
| அஜெண்டா | 16 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 18 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 27 |
| T.V. சீரியல் - நடைமுறை, தத்துவம் | 28 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 32 |
| அன்பர் கடிதம் | 36 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 39 |
| மனிதனும் மிருகமும் | 43 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

நடக்காதது அனைத்தையும் அன்னை நடத்தி வைக்கிறார். அவற்றும் ஏதேனும் ஒன்றே போதும் ஒருவர் சாதிக்க.

ஆன்ம விழிப்பு சரணாகதி-யாகாது. விழித்த ஆன்மா தன் பகுதியை முழுமையுடன் கலக்க முனைவதே சரணா-கதியாகும்.

நம்முடைய அர்த்தமற்ற ஆர்வத்திற்குகூட அன்னை அதிர்ஷ்டம் தருகிறார்.

எதைப் பெற்றால் அனைத்தையும் பெற முடியுமோ அதுவே நிம்மதி.

## இம்மாதச் செய்தி

**100 கோடியை 100 ரூபாய் போலாக்குவது தூய்மையான பக்தியில் பிறந்த நம்பிக்கை.**



# வாழ்வில் பெருவெற்றி பெற்றவர்கள்

N. அசோகன்

பொதுவாக உலகத்தில் உத்தமர்கள்என்று பெயர் பெற்றவர்கள் பண்பாலும், நன்நடத்தையாலும், உழைப்பாலும், திறமையாலும் உயர்ந்தவர்களாக இருப்பார்கள். இப்படி வாழ்க்கையில் உச்சிக்குச் சென்றவர்கள்கூட தமக்கு ஒரு பெயர், புகழ் வேண்டுமென்று பிரியப்படுவார்கள். ஒருவருக்கு உயர்ந்த ஆன்மீக அம்சம் இருக்கிறதென்றால் அதற்கேற்றபடி அவருடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டாரென்றால் அவரைத் தேடி புகழும், பிரபலமும் தானே வரும். பொதுவாக ஆயிரம்பேர் நல்ல பெயருக்கும், புகழுக்கும் ஏங்கினாலும் ஏதோ ஒருவருக்குத்தான் அது கிட்டும். இந்தியக் கலாச்சாரம் ஆன்மீகம் நிறைந்த கலாச்சாரமாக இருப்பதால் இங்கே ஆன்ம விழிப்புள்ள எவருக்கும் ஆன்மாவின் தரிசனம் சுலபமாகக் கிடைக்கும். அவரை மகான்என்று மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். ரிஷி, முனி, தபஸ்விஎன்று பெயர் வாங்கிய எல்லோருமே தம்முடைய ஆன்மீக அம்சத்தை உணர்ந்து அதை வளர்த்துக்கொண்டு ஆன்மீக உயர்வை எட்டியவர்கள்தாம். அமெரிக்காவில் நானூறு ஆண்டுக் காலச் சரித்திரத்தில் ஆன்மீகச் சிறப்புப் பொருந்திய ஒருவர் பிறக்காதது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க மண்ணே ஆன்மீகத்திற்கு ஒத்து வாராது என்று சொல்லலாம். பணம் சம்பாதிக்க வேண்டும்என்று இந்தியர்கள் ஆர்வம் காட்டினாலும், பலகோடிஸ்வரர்கள் இந்தியாவில் தலை எடுத்திருந்தாலும் இந்தியக் கலாச்சாரத்தில் ஆன்மீகம் ஆதிக்கம் செலுத்துவதால் பணம் சம்பாதிப்பது இந்நாட்டில் இரண்டாம் பட்சம் ஆகிவிட்டது.

இந்தியாவினுடைய பாரம்பரிய ஆன்மீகம், பணம் ஆன்மீகத்திற்கெதிரானதுஎன்று விளக்கி வைத்திருந்தது. ஆனால் அன்னை ஸ்ரீ அரவிந்தர் துவக்கி வைத்துள்ள புதிய ஆன்மீகம் பணம் வாழ்க்கையை தெய்வீக மயமாக்குவதற்கு உதவும்என்று சொல்கிறது. இந்தப் புதிய கருத்து உலகில் பரவி வருகிறது. பணம் ஆன்மீகத்திற்கு

ஓர் அஸ்திவாரம்என்று உலகம் உணர்கின்ற நேரம் வந்துவிட்டது. பொதுவாக வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும்என்று எல்லோருமே விரும்புவார்கள். அப்படி எடுத்த காரியம் எதிலும் வெற்றி பெறுவதற்கு உதவக் கூடிய ரகசியம் ஒன்று இருக்கிறது. அந்த ரகசியம்

*ஏற்ற லட்சியத்தை ஒரே குறியாகக் கொள்ளுதல்.*

ஆன்மா விழித்துக் கொண்டால் அது தன்னுடைய நோக்கத்தைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் அதனுடைய வெற்றியை யாரும் தடை செய்ய முடியாது. வாழ்க்கையில் மற்ற எந்தத் துறையில் வெற்றியடைய விரும்பினாலும் இதே தீவிரம் இருக்க வேண்டும். பெரும் பணம் சம்பாதித்து அதிர்ஷ்டசாலிகள்என்று பெயரெடுத்தவர்கள் பணம் சம்பாதிப்பதில் ஒரே குறியாகவே இருந்திருப்பார்கள். அதிர்ஷ்டத்தைத் தேடுபவர்களுக்குப் பின்னால் பல ரகசியங்கள் இருக்கின்றன. அவை பின்வருமாறு.

✡ சமூகத்தில் தனக்கிருந்த அந்தஸ்து மரியாதையை இழந்தவர்கள் பணம் சம்பாதித்து அதன்மூலம் இழந்த அந்தஸ்த்தை திரும்பப் பெற முயல்வார்கள்.

✡ தமக்குள்ள வறுமையை ஏற்பவர் பலர் வறுமையிலிருந்து விடுபட்டே ஆக வேண்டும்என்று தீர்மானம் செய்கின்ற ஒரு சிலர் வறுமைக்கு நிவாரணமாகச் செல்வத்தைத் தேடுகிறார்கள்.

✡ நாம் எதைத் தீவிரமாக நாடினாலும் அது நமக்குக் கிடைக்காமல் போவதில்லை.

✡ சம்பாத்தியத்தைவிட செலவைக் குறைவாகச் செய்பவர்களுக்கு நாளடைவில் பணம் சேரும். ஆனால் சம்பாத்தியம் குறைவாகவும் செலவு அதிகமாகவும் செய்பவர்களுக்குப் பணம் என்றுமே சேராது.

✡ வறுமையின் காரணமாக ஊராரால் ஒதுக்கப்பட்டு, அவமானப்பட்டவர் அந்த அவமானத்திற்குப் பரிகாரமாகப் பணத்தைத் தேடினாரென்றால், அதிலேயே குறியாக இருந்தாரென்றால் அவர் அநேகமாகப் பெரும் பணக்காரராக மாறுவார்.

✡ வசதியான மற்றும் அன்பான குடும்பத்தில் பிறந்து



வளர்ந்தவர்களுக்குப் பணம் பழக்கமான ஒன்றாகிவிடுவதால் அவர்கள் வறுமையில் வாடியவர்களைப்போல பணத்தைத் தீவிரமாகத் தேடுவதில்லை.

அமெரிக்க கோடிஸ்வரர்கள் பத்துப்பேர், வெளிநாட்டுக் கோடிஸ்வரர்கள் பத்துப்பேர்என்று இருபதுபேர் வாழ்க்கையில் நடந்தவற்றை ஆராய்ச்சிசெய்து மேற்கண்ட உண்மைகளை ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கண்டறிந்துள்ளார். இந்த இருபதுபேரும் திறமையால் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களேயன்றி பண்பால் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. இவர்கள் எல்லோருமே அனாதைகள், தாழ்த்தப்பட்டவர், தகப்பனார் யார்என்று தெரியாதவர், வீடு வாசல் இல்லாமல் வீதியிலேயே வாசம்செய்து வளர்ந்தவர்கள்என்ற சமூகப் பின்னணி கொண்டவர்கள். இவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் என்று ஆராய்ந்தால் அதன்மூலம் சில பெரிய உண்மைகள் தெரிய வரும்.

✡ ஊருக்கு அடங்கி வாழ்பவர்கள் ஓரளவுதான் வெற்றி பெறுவார்கள்.

✡ ஊராரால் ஒதுக்கப்படுபவர்கள் ஊரைவிட பெரியதான உலகத்துக்குள் தள்ளப்படுகிறார்கள். ஊர் சத்என்றால் உலகம் அசத். அசத் சத்தை விடப் பெரியது. ஆகவே இப்படிப்பட்டவர்கள் சாதிப்பது ஊரார் கண்டறியாத பெருவெற்றியாக அமையும்.

✡ மேதைகளைக் கல்லூரிகள் உருவாக்குவதில்லை. ஸ்ரீநிவாச ராமனுஜம் போல ஒரு கணித மேதை இதுவரை பிறக்கவில்லை. அவர் எழுதியதைப் புரிந்துகொள்வதற்கு இதுவரை எந்தக் கணிதப் பேராசிரியராலும் முடியவில்லை. அவருக்கு B.A. மற்றும் M.A. பட்டம் கொடுத்தால் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் தான் பெருமைப்பட்டுக் கொள்ளலாமே தவிர அவருக்குப் பெருமை சேராது.

✡ ஒன்றுமே இல்லாமல் வாழ்க்கையைத் துவக்கி பெரும்பணம் ஈட்ட வேண்டும்என்று ஒரே குறியாய் நிற்பவர்கள்தாம் பெருஞ் செல்வர்களாக மாறுகிறார்கள். இந்தப் பெரும்பணத்தினுடைய மூலம் ஒன்றுமே இல்லாத அவர்களுடைய ஆரம்ப வறுமை நிலையாகும்.

❀ ❀ ❀

## P.104 Our middle terms sketched out in prescient lines

### குறி சொல்லும் கோணத்தின் நடு மையக்கோலம்

- ✡ முடிவான பலனை முன்கூட்டியறியும் ஜீவன்
- ✡ இறங்கிவரும் லோகத்தின் மினுமினுக்கும் கூரை
- ✡ மோட்சம் தரும் வரத்தைத் தடை செய்யும் பூசாரி
- ✡ பெருவெளியின் சூறாவளி சுவாசத்தைச் சிறுதுவாரத்தால் அனுமதிக்கும்
- ✡ தங்கவலைமூலம் தவழும் நறுமணத்தென்றல்
- ✡ மண்ணின் மனத்தை மச்சாக மறைக்கும்
- ✡ அணையாத சூரியன், பொழியும் கடவுளின் பேரருள்
- ✡ வினோதமான வண்ண ஒளி கால்வாயாக நுழைந்தது
- ✡ நம் வாழ்நாளை நடத்திச் செல்லும் சக்திக்குப் பாதை
- ✡ முரடான இயற்கைச் சுவரின்பின் மறைந்துள்ள சக்தி
- ✡ மனமும் ரூபமும் மணக்கும் திருமணப்பந்தல்
- ✡ வண்ணத்திரையின்பின் மறந்து
- ✡ வையகம் காட்டிய வழி திரையூடே திருட்டுத்தனமாக வந்தது
- ✡ புறப்பொலிவு எழும் அகவுணர்வு
- ✡ உயர்ந்த ஜீவியத்தின் உணர்ச்சிக்கோடுகள்
- ✡ நம் ஸ்பர்சமறியாத அதன் சூட்சுமம்
- ✡ நம்மால் உணரமுடியாத அதன் உணர்வின் தூய்மை
- ✡ மூலத்தின் ஒளியை மூலையில் சந்திக்கும்
- ✡ அழியும் பூமியின் அரைக்ஷண முயற்சி உந்தும்



- ✡ அழகொழுகும் சிறப்பான அமைப்பின் வடிவம்
- ✡ பிறந்த தெய்வத்தின் சக்தி நடமாடும் அறை
- ✡ பிரம்மத்தின் குழவி தவழும் விளையாட்டு
- ✡ சிறகடித்துப் பறக்கும் சிந்தனையின் தொகுப்பு உந்தி எழும்
- ✡ நிலையான அற்புத வண்ணத்தின் ஒளியை ருசிக்கும்
- ✡ தெளிவான காற்றைப் பேசவிடும் தாலாட்டு
- ✡ காலத்தை வென்ற மரத்தில் கனவுலக நிறம் தோய்ந்து
- ✡ புவியின் காலமெனும் சமுத்திரத்துள் பாய்ந்து நீந்தும்
- ✡ நாம் காண்பதன் அழகுருவம் அங்கே எழுந்தது
- ✡ நெஞ்சு நினைத்தால், அறிவு செப்பனிட்டது
- ✡ மூலத்தின் அழகை இழந்து
- ✡ புவியில் நாடு கடத்தப்பட்டு, அதை வணங்கி ஏற்று
- ✡ களை பொருந்திய கவர்ச்சி இருப்பதை ஏற்று
- ✡ தவறற்ற அமரத்வ எல்லையின்கண் நின்று
- ✡ அழகு அங்கு பெற்றது அமரவாழ்வு.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

*(Perfect)* சிறப்பானதைத் தவிர மனம் மற்றதை ஏற்காது. பூரணச் சிறப்பில்லாவிட்டால் மனம் மகிழ்வுறாது. தேவையைப் பூர்த்தி செய்வதால் உடல் ஏற்றுக்கொள்ளும், சிறப்பை நாடாது.

மனம் இலட்சியவாதி, உடல் யதார்த்தவாதி. மனத்தைக் கடந்து சத்தியஜீவியத்தை அடைந்தால், இலட்சியமும், யதார்த்தமும் சேர்ந்து இலட்சிய நடைமுறையை ஏற்படுத்தும்.

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

So, Mind is no independent entity. Page No.174
Nor is it original. Para No.3
It is a final operation of the Supermind.
Supermind is Truth-Consciousness.
Supermind goes with Mind.
So, Truth-consciousness is the agency.
It is the real creative agency of the universal Existence.
Mind is in its own darkened consciousness.
It is separated from its source.
Yet there is that larger movement always there in the working of Mind.
It forces them to preserve the right relations.
They bear in themselves certain inevitable results.
It forces them to evolve those results.
One such is seen in the tree and the seed.
To produce the right tree from the right seed is a result.
The material force is brute, inert and darkened.
Mind forces the matter in a world of Law, of order.



## 19. வாழ்வு

மனம் சுதந்திரமானதன்று.
அதற்கென சொந்தமாக எதுவுமில்லை.
சத்தியஜீவியச் செயலின் முடிவு மனம்.
சத்தியஜீவியம் சத்தியத்தின்ஜீவியம்.
மனம் உள்ள இடத்தில் சத்தியஜீவியம் உண்டு.
எனவே சத்தியஜீவியம் கருவி.
பிரபஞ்ச வாழ்வுக்கு உண்மையில் அதுவே சிருஷ்டிக்கும் கருவி.
மனம் தன் இருண்ட ஜீவியத்துள் உள்ளது.
அதன் மூலத்தினின்று அது பிரிக்கப்பட்டது.
இருந்தாலும் மனத்தில் ஒரு பெரிய சலனம் உண்டு. அது மனதின் செயலில் வெளிப்படும்.
மனம் அவற்றைச் சரியான தொடர்பு கொள்ளச் செய்யும்.
அவற்றிற்குத் தவிர்க்க முடியாத சில பலன்கள் உண்டு.
மனம் அப்பலன்களை உற்பத்தி செய்யும் நிர்ப்பந்தத்திலுள்ளது.
மரம், விதை அப்படிப்பட்ட உறவு.
சரியான விதையிலிருந்து சரியான மரம் எழுவது பலன்.
ஜட சக்தி, ஜடமானது, இருண்டது, முரட்டுத்தனமானது.
மனம் ஜடத்தை, சட்டப்படி ஒழுங்காக இருக்கும்படிக் கட்டாயப்படுத்தும்.

Otherwise it would be a hurtling chance and chaos.
Mind compels matters to have the right relation.
This order and this right relation can only be relative.
It cannot be the supreme order.
It would not be supreme right.
If Mind were not separated from Supermind, it would reign.
This is an arrangement.
This is an order of the results right and proper to action.
It is the action of the dividing Mind.
It creates separative oppositions.
They are its dual contrary sides of one Truth.
The Divine consciousness conceived of the Idea.
It threw into operation this Idea.
It is an Idea of this dual or divided representation of itself.
It deduces from it in real-idea.
It educes practically from it in substance of life.
It does so by the governing action of the whole Truth-Consciousness.
It is behind it.
It does so to get its own inferior truth or inevitable results of various relations.
*Svabhava* and *Svadharma* are the self-being and self-law of the being.
It is seen by the divine Knowledge.
This is the nature of Law or Truth in the world.
It is the first working.
It brings out of that which is contained in being.
It is implied in the essence and nature of the thing itself.
It is latent in the self.
The Upanishad has several wonderful formulas.



அது இல்லாவிட்டால் உலகம் ஆர்ப்பாட்டமான குழப்பமாக இருக்கும்.
மனம் ஜடத்தைச் சரியான உறவுகொள்ளும்படி நிர்ப்பந்திக்கும்.
இந்த உறவும் ஒழுங்கும் ஓரளவுதான் சரியாக இருக்கும்.
இது உயர்ந்த ஒழுங்காக இருக்காது.
இது உயர்ந்த முறையாகவுமாகாது.
மனம் சத்தியஜீவியத்தினின்று பிரிக்கப்பட்டால் அது ஆட்சி செய்யும்.
இது ஓர் ஏற்பாடு.
இது சரியான உறவுள்ளது, முறையான செயலுக்குரியது.
இது பிரிக்கும் மனத்தின் செயல்.
தனியான எதிர்ப்பை இது எழுப்பும்.
அவை ஒரே சத்தியத்தில் இரு எதிர் முனைகள்.
தெய்வீகஜீவியம் எண்ணத்தை உருவாக்கியது.
இந்த எண்ணத்தைச் செயலாக்க முனைந்தது.
இந்த இரட்டையான பிரிந்த நிலைக்குரிய எண்ணமிது.
முழுஎண்ணத்திலிருந்து மனம் இதைப் பெறுகிறது.
இதனிடமிருந்து வாழ்வுக்குரியதை நடைமுறையில் பெறுகிறது.
முழுசத்தியஜீவியத்தின் ஆட்சியிலிருந்து அது இதைப் பெறுகிறது.

அதன்பின் இது உண்டு.
தன் சிறிய தவிர்க்கமுடியாத சத்தியத்தை இவ்விதம் பெறுகிறது. இவை பல்வேறு உறவுகளால் ஏற்படுகின்றன.
சுபாவமும் சுதர்மமும் ஜீவனின் சுயபாவம், சொந்த சட்டம்.

தெய்வீகஞானம் இதைக் காண முடியும்.
இது சட்டத்தின் சுபாவம், உலகின் சத்தியம்.
இது நியாயமான வேலைத்திட்டம்.
ஜீவனில் பொதிந்துள்ளதை இது வெளியில் கொண்டுவருகிறது.
விஷயத்தின் சுபாவத்திலும் சாரத்திலும் உள்ளவை அவை.
இது பிரம்மத்திலுள்ளது.
உபநிஷதங்களில் அற்புதமான பல சூத்திரங்களுண்டு.

They contain a world of knowledge.
They are in a few revealing words.
The Self-existent is the seer and thinker.
It becomes everywhere.
It has arranged in Himself all things rightly.
It is according to their truth.
It is done from years eternal.

We live in a triple world. Page No.175
It is the world of Mind-Life-Body. Para No.4
We live in it as a consequence of creation.
It is triple only in its accomplished evolution.
Life is involved in Matter.
It has emerged in the form of thinking.
It is mentally conscious life.
Supermind is involved in Mind.
Supermind is the origin and ruler of the other three.
Therefore this also must emerge.
Mind is involved in Life and Matter.
We seek for an intelligence.
It is at the root of the world.
Intelligence is the highest principle.
We are aware of it.
It governs all our action and creation.
It also explains them.
Consciousness in the universe is a mental consciousness.
It is the only possible consciousness.
Intelligence perceives, reflects.
It uses within the measure of its capacity.
The work of a Truth of being is superior to itself.



அது அதிகபட்சமான விவேகம்.
அவற்றை ஞானோதயமான சொற்களால் கூறுகின்றனர்.
ரிஷியும் முனிவரும் சுயம்பானவர்.
அவை எங்கும் பரவும்.
தன்னுள் அனைத்தையும் அது ஏற்பாடு செய்துள்ளது.
அதன் சத்தியத்திற்கேற்ப அவை அமைந்துள்ளன.
நெடுங்காலமான ஏற்பாடு அது.

நாம் வாழ்வது மூவகை லோகம்.
மனம், உயிர், உடலாலான லோகம்.
சிருஷ்டியால் நாம் இங்கு வாழ்கிறோம்.
பரிணாமம் முடிந்ததால் அது மூவகையின.
உயிர் ஜடத்துள் உள்ளது.
அது சிந்தனையாக வெளிவருகிறது.
மனம் விழிப்புற்று வாழ்வது.
சத்தியஜீவியம் மனத்துள் உறைகிறது.
சத்தியஜீவியம் இவற்றின் மூலம். அது இந்த லோகங்களை ஆள்கிறது.
அதனால் அதுவும் வெளிவரவேண்டும்.
மனம், உயிர், உடலில் மறைந்துள்ளது.
நாம் ஓர் அறிவைத் தேடுகிறோம்.
அது உலகின் அஸ்திவாரம்.
அறிவு உயர்ந்த தத்துவம்.
நாம் அதை அறிவோம்.
நம் செயலையும், சிருஷ்டியையும் அது ஆட்சி செய்யும்.
அது அவற்றை விளக்கும்.
உலகிலுள்ள ஜீவியம் மனத்தின் ஜீவியம்.
அதுமட்டுமே உலகிலிருக்க முடியும்.
அறிவு பார்க்கிறது, சிந்திக்கிறது.
அதன் திறனுக்குள் அது செயல்படுகிறது.
ஜீவனின் சத்தியத்தின் வேலை அறிவைவிட உயர்ந்தது.

There is a power behind.
It must be another and superior form of Consciousness.
It is a Consciousness proper to that Truth.
We have to mend our conception accordingly.
We have to affirm the truth we discover.
It is an involved Supermind that is behind.
It is not a subconscious Mind or Intelligence.
The Supermind puts Mind in front of it.
It comes as the immediately active special form.
It is a form of its knowledge-will.
It is subconscious in Force.
It uses material Force or Will.
That Will is in substance of being.
It is its executive Nature or Prakriti.
It has created this material universe.

*Contd…*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

(Perfection) எந்த நிலையிலும் சிறப்பு பிரம்மத்தைக் குறிக்கும். அனைவரும் தாறுமாறான வாழ்வை நடத்தும் பொழுது நாணயம், கற்பு, பிரம்மத்தை உணர்த்தும். அந்நிலையில் (perfect) சிறப்பாக இருப்பது கடினம். முயற்சியும், பலனும் பூரணமாக இல்லாவிட்டாலும், அந்நிலையில் அது பூரணமுயற்சிஎன்பதால் அது பிரம்மமாகும்.

***எதன் சிறப்பும் பிரம்மத்தை அடையும்.***



அதன்பின்னால் ஒரு சக்தியுண்டு.
அது ஜீவியத்தின் உயர்ந்த ரூபமாக, மாறாக இருக்கும்.
அது ஜீவியத்திற்குரியது, சத்தியத்திற்குரியது.
நம் கருத்தை நாம் அதற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும்.
நாம் கண்ட உண்மையை நாம் வலியுறுத்த வேண்டும்.
பின்னால் உள்ளது மறைந்துள்ள சத்தியஜீவியம்.
அது அறிவன்று; ஆழ்மனமன்று.
சத்தியஜீவியம் மனத்தை முன்வைக்கிறது.
அருகில் செயல்படும் சிறப்பான ரூபம் அது.
அது தன் ஞான-உறுதியின் ரூபம்.
அதன் சக்தி ஆழ்மனத்துடையது.
ஜடசக்தியை அல்லது உறுதியை அது பயன்படுத்தும்.
ஜீவனின் பொருளில் உறுதியுள்ளது.
அதன் செயலாற்றும் இயற்கை அல்லது பிரகிருதி அது.
இந்த ஜடப்பிரபஞ்சத்தை அது சிருஷ்டித்தது.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்தைப் புறக்கணித்து, தான் நினைத்ததை மனிதன் நிறைவேற்றுவதே அடுத்த கட்டம். மார்டின் லூதர் மதத்தில் செய்த புரட்சியும், சாக்ரடீஸ் அறிவில் செய்த புரட்சியும், ஜனநாயகம் அரசியலில் செய்த புரட்சியைப்போல், இனி மனிதன் சமூகத்தைக் கடந்துசென்றால், சமூகம் அவனை ஏற்க வேண்டும்.

***மனிதன் சமூகத்தைப் பின்பற்றியது மாறி***
***சமூகம் இனி மனிதனைப் பின்பற்ற வேண்டும்.***

**Each illness has its vibratory mode**
**It is the exact measure of resistance in**
**Matter, to the very atom**
**ஒவ்வொரு நோய்க்கும் உரிய குணம் உண்டு**
**ஜடம் எதிர்ப்பதைத் துல்லியமாகக் காட்டும்**
**அணுவரை அது தெரியும்** – *அஜெண்டா*

✡ புரியாத பாடம் தலை வலி தரும்.
பயத்தைக் கிளப்பும், செய்தி வயிற்றைப் புரட்டும்.
அதிர்ச்சி உடலை நடுங்க வைக்கும்.
திடீரெனவரும் பயங்கரச் செய்தி மூச்சை நிறுத்தும்.

✡ கெட்டது வேண்டாம். கெட்டதை எதிர்ப்பதைப்போல், நாம் நல்லதையும் எதிர்ப்போம்.
நமக்கு வேண்டியது நல்லதில்லை, சௌகரியமானது வேண்டும்.
**பெரிய நல்லது உள்ள நிலைமையை உடைக்கும்.**
அருள் அதிர்ஷ்டமாக வருவது எவருக்கும் பொறுக்காது.
நம் ஜீவனும், உடலும் நமக்கு வரும் அருளை எதிர்ப்பதால் நோய் வருகிறது.

✡ பரீட்சையில் பாஸ் செய்தால் வேலைக்குப் போகலாம்.
பரீட்சை வந்தால் ஜுரமும் கூடவே வரும்.

✡ எலக்ஷன் வந்தால், நம் தொகுதிக்கு MLA, M.P. உண்டு.
நமக்கும் அது உண்டு.
எலக்ஷன் வந்தால் அரசியல்வாதிக்குப் பீதி எழும்.

✡ பெரிய பிறந்தநாள் பொற்கிழி பெற்றவர் முகம் அன்று கறுத்து விட்டது.
அதிர்ஷ்டம் அவருக்கே பொறுக்கவில்லை.

✡ அன்னையை அறிவது அதிர்ஷ்டம்.
அன்னை வீட்டிற்கு வந்தவுடன், ஒருவருக்குத் தலை சுற்றியது, வயிறு



ஆப்பரேஷனாகும் அளவுக்குக் கோளாறாயிற்று, பயம் அலையலையாக எழுந்தது.

**அன்னைக்குரிய எதிர்ப்பு நோய்.**

✡ ஒரு கோடி ரூபாய் தொழில் செய்தவருக்கு 800 கோடிக்குத் தொழில் க்ஷணத்தில் பெருகியது.

**அவர் குணம் கெட்டுவிட்டது.**

**அதைச் செய்தவரை நிந்திக்க ஆரம்பித்து விட்டார்.**

✡ "நல்லது சொன்னால், பதிலாகக் கெட்டது பேசுவது" சிலருடைய குணம்.
இவர்களால் அதிர்ஷ்டத்தையோ, அருளையோ ஏற்க முடிவதில்லை.

✡ பெரிய பாராட்டுவிழா நடத்தி, அதன் சிகரமான நிகழ்ச்சிக்குத் தலைவரை அழைத்துப்போக வந்தவரிடம், தலைவர்

**"அந்த இடத்திற்கு நான் வரவில்லை" என்றார்.**

✡ 60 வயதுவரை அரசியலில் தொண்டராகவே இருந்து எந்தச் சிறிய பதவியும் பெறாதவர் அன்னைச் சூழலில் வந்தபின், அவரைச் சூழ்ந்துள்ள ஒளியைக் கண்டு

**"நீங்கள் முனிசிபல் சேர்மனாக வேண்டும்".**

என்று கூறியவரைக் காரமாக அவர் திட்டினார். அதையும் மீறி முனிசிபல் கவுன்சிலரானார்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரகிருதியின் அசைவுகள் சமர்ப்பணமானால் சைத்திய புருஷன் வளர ஆரம்பிப்பான்.

***சமர்ப்பணத்தால் வளரும் சைத்திய புருஷன்.***

# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## காஷ்மீரில் 1947-இல் பத்தானியர் ஆக்ரமித்தனர்

கஜினி முகம்மது 17 முறை படையெடுத்தது இந்த இடத்திலிருந்து தான். இரண்டு படையெடுப்பு: 1) முஸ்லீம் 800 ஆண்டு 2) பிரிட்டிஷ் 400 ஆண்டு. இரண்டாவது முதலில் விலகிற்று. முதல் படையெடுப்பு நம் நாட்டு மக்களை அவர்கள் மதத்தைத் தழுவும்படிச் செய்தனர்.

1000 ஆண்டிற்குமுன் பட்டாணியர் கஜனி தலைமையில் 17 முறை இந்தியா மீது படையெடுத்தனர். 1000 ஆண்டு ஆனபின்னும் அந்தப் பழக்கம் 1947-இல் மீண்டும் வந்தது. இது தவிர்க்க முடியாதது. அன்னை சக்தியே இதைத் தவிர்க்கும். முஸ்லீம் ஆண்டபொழுது நம்மை மதம் மாற்றினர். தீண்டாதவர் முஸ்லீம் மதத்தில் தீண்டாமை இல்லாததால் விரும்பிச் சேர்ந்தனர். அதுவே இன்று பாக்கிஸ்தானாயிற்று. நாட்டில் ஜாதி, பேதம், மனத்தில் தீண்டாமை ஒழியாதவரை பாக்கிஸ்தான் உயிருடனிருக்கும்.

✡ முஸ்லீம் அரசர் நம்மைக் கட்டுப்படுத்தியதைவிட நம் ஹரிஜன்கள் விரும்பி முஸ்லீமாக மாறினது அதிகம்.

நமது வாழ்வில் அதே அம்சம் இன்று இருக்கும். ஒவ்வோர் இந்தியனுடைய வாழ்விலும் அது இருக்கும். அதை நாம் கண்டு களைந்தால் நாடு ஐக்கியமாகும் கருவியாவோம்.

பணக்காரப் பையனும், ஏழைப்பையனும் சந்தித்தனர். "நாங்கள் வசதியாக இருப்பதால் எங்கள் உறவினர் பொறாமைப் படுகிறார்கள்" என்று பணக்காரப் பையன் சொன்னதைக் கேட்டு ஏழைப் பையன் சிரித்து விட்டான். அவன் இன்று ஏழையாக இருந்தாலும் 50



ஆண்டுகளுக்குமுன் அவர்கள் வசதியாக இருந்தார்கள். (இன்று பணக்காரப் பையன் இந்த ஏழை அன்று பெற்றிருந்த வசதியைப் போல் 15 மடங்கு வசதியாக இருக்கிறான்). அதனால் அவனுக்கு அவர்கள் பணக்காரர்கள். தற்சமயம் வசதியானவர்கள் ஏழைகள் என்பது அபிப்பிராயம். அதனால் அவன் சிரிக்கிறான். இது தாழ்வு மனப்பான்மை. உயர்ந்த நினைப்பு.

ஏழைக்கு அவர்கள் பணக்காரர், மற்றவர் ஏழைஎன்பது நினைப்பு.

பணத்தை சம்பாதிப்பவன் புதுப்பணக்காரன்.

அதனால் அவன் மட்டம், ஏழை.

இதுபோன்று நம் மனம் எதைக் கருதுகிறது?

அது புரிவது முக்கியம்.

நம் திறமை, நல்ல குணம் நமக்கு உயர்வு.

அது பேரருள் பெரியதாகச் செயல்படத் தடை.

பொதுவாக நாம் இதை அறிய முடிவதில்லை.

அவர்கட்குத் தாழ்வு மனப்பான்மை.

நமக்கு என்ன (complex) மனப்பான்மை?

ஜாமீன் கொடுத்த பத்திரம் அன்பரிடமிருக்கிறது.

கொடுத்தவர் பெற்றுக்கொண்டால் உள்ளதும் போகும்.

இந்த அபிப்பிராயம் தெரிந்து, வேண்டாம்என்று கூறினார் கொடுத்தவர்.

கேட்டால் கொடுத்துவிடலாம்.

அதுவும் அன்பரை ஓரளவு பாதிக்கும்.

பெறுபவர்களை அழித்து விடும்.

(அன்பரிடம் அடுத்தவர் பத்திரம் சந்தர்ப்பவசமாக ஜாமீனாக வந்தது. கொடுத்தவர் நிலம் ரூ.10,000யிலிருந்து ரூ 50,000 (ஏக்கர்)க்கு உயர்ந்தவுடன் பத்திரத்தைக் கேட்டார். அன்பர் கொடுக்க முயன்று அத்துடன் அன்பர் தொடர்பு அறுந்துவிடும்என்றும் கூறினார் - அன்பர் பெற்ற வேலை முதல் 2 ஆண்டில் முடிந்து விட்டது - இப்பொழுது

அந்நிலங்கள் ஏக்கர் 1 கோடியாக உயர்ந்துள்ளன. இதுவே அன்னைச் சூழலின் சக்தி).

திருடனுக்கு அருள் வழங்க காணிக்கையைத் திருட வேண்டும்.

## ✡ கஷ்டம்

❀ கஷ்டம் கடந்த காலத்தில் வந்ததற்கு நாம் கஷ்டப்படக் கூடாது. அது அவசியமானதுஎன்ற ஞானம், கஷ்டம் போனபிறகு வரும் என்கிறார் பகவான்.

⇛ அந்த ஞானம் வந்தபின், அது கஷ்டம் வருமுன் இருந்திருந்தால் அக்கஷ்டம் வந்திருக்காதுஎனவும் தத்துவம் கூறுகிறது.

⇛ இம்முரண்பாட்டை எப்படி உடன்பாடாக்குவது? என்பது கேள்வி.

பொதுவாக அந்த ஞானம் வர, பல பிறவிகள் எடுக்க வேண்டும். அந்த ஞானம் தேவைஎன்ற ஞானம், அதை இன்றே அளித்து விடும்.

❀ நடப்பது நடக்கட்டும் நாம் மாற்ற முடியாதுஎன்பதும்,

❀ மனம் மாறினால் அனைத்தும் அதே நேரம் மாறும்என்ற ஞானமும் இணையும் இடம் - நம்மையறியாமல் அன்னையில் லயிப்பது. லயித்தால் மாறும்.

மாறியது நீடிக்க லயம் விழிப்பில் நிலைக்க வேண்டும்.

அதாவது நெடிய நிதானம் உள்ளிருந்து எழ வேண்டும்.

எரிச்சல் படக்கூடாதுஎன்பது மட்டுமே முக்கியக் கட்டுப்பாடு.

அதைவிட முக்கியமானது நாமே விரும்பி ஒரு காரியத்தைச் செய்வது. அப்படிச் செய்ய முனைவதை நிறுத்துபவருக்கு சர்வ ஆரம்பப் பரித்தியாகிஎனப் பெயர்.

பணம் சம்பாதிப்பது திறமை - நல்லது, கெட்டது இரண்டும் திறமை.

குணம் சம்பாதிப்பது பொறுமை - பொறுக்க முடியாத பொறுமை.



பணத்தைக் கொடுப்பது தியாகம்.

குணத்தை விடுவது சாதனை.

விடமுடியாதவர்க்கு (immediate-boss) முதலாளியை அவரையே அன்னையாகக் கருதிப் பணிவது.

முதலாளிக்குப் (Boss) பணிவதைவிட அவரிடமுள்ள அன்னைக்குப் பணிவது மேல்.

நம் மனத்திலுள்ள அன்னை அவரிடமுள்ள அன்னையை அடைவது பணிவை உறவாக்கும்.

உள்ளம் உறவாடுவதை உயிர் உறவாக மாற்றலாம்.

உயிரைக் கடந்த ஆத்ம உறவாக்கலாம்.

அன்னைஉறவு அதனினும் சிறந்தது.

சிறப்பைத் தேடாத மனம் சிறப்பைவிட உயர்ந்தது.

நிதானம் எதையும் கருதாது.

கருத்து அழிவது நிதானம் நிலைப்பது.

## ஆத்மா அறிவுறுத்தும் சகுனம்

✡ பார்க்கும் டெலிவிஷன், படிக்கும் கதை, கேட்கும் சொல், மனத்தில் எழும் எண்ணம் அனைத்தும் ஆத்மா அறிவுறுத்தும் சகுனம்.

❀ சரணாகதியையும் (surrender) 'நாம்' செய்யவேண்டும்என்ற அளவிலும் 'நாம்' வாராமலிருப்பது நல்லது.

'நினைவு' உள்ளவரை 'நாம்' அழியாது.

அந்த நினைவுக்குப்பின் வயிற்றுக்கு இல்லாதவன் வசதியானவரைப் பார்த்துச் சிரிக்கும் சிரிப்பிருக்கும்.

நாம் சிரிக்காவிட்டால், சிரிக்கும் திறமையிருக்கும்.

அதைக் காண்பது (sincerity) உண்மை.

''சத்தியம்என்றால் என்ன?'' என்ற கட்டுரை சத்தியத்தின் தத்துவத்தைக் கூறும்.

கேலியாகச் சிரிக்கும் ஏழைப் பையனிடம் அன்னையைப் பற்றிப் பேசிப் பலன் பெறலாம்என்ற நினைவு ஊழலான அரசியல்வாதியை ஊழலை ஒழிக்கப் பயன்படுத்தலாம்என்ற நினைவு.

கேலியாகக் குத்தலாகச் சிரிக்கும் ஏழைப்பையனை மாற்ற முயல்வது சிறுபிள்ளைத்தனம் (childishness) என்கிறார் அன்னை.

அதை எதிர்பார்க்காமல், அவன் மாறும் அளவுக்கு நம்மால் மாற முடியுமானால் முயன்றால் முடிவான பலன் நமக்குக் கிடைக்கும்.

எதைச் செய்வதுஎன்பது (choice) தட்டுப்படாதது போலிருக்கும்.

சூட்சுமத்திலிருப்பதால் (subtle plane) தட்டுப்படாது.

தட்டுப்பட்டால் அன்னை பிடிபடுவார்.

இது உயர்ந்த பரிசோதனை.

இது பலித்தால் பல ஆண்டு சிரிப்பவனே மாறி நடப்பான்.

அது நிலையாக இருப்பது அருளன்று; பேரருள்.

திருட்டு மனிதர் திருட்டைவிட்டு வேலை செய்ய ஆரம்பித்தது போன்றது.

திருடு தொடர்ந்தால் பொய் எழும்.

பொய் திருட்டைவிடத் தவறு. பொய் சொல்வது ஒன்று.

பொய்யைக் கொள்கையாகச் சொல்வது வேறு.

அதையே வாழும் வழியாகக் கொள்வது (organised falsehood) பொய்யால் வாழ்வது.

அது பொய்க்கு உயிரளித்து, வாழ்வளிக்கும்.

அப்படிப்பட்டவர் தவறாமல் ஜெயிலுக்குப் போவார்கள்.

மேல்நாட்டார் பொய் சொல்ல மாட்டார்கள்.

அவர்கள் அன்னைக்குப் பொய்யாக இருந்தால், சிரிக்கும் ஏழைப் பையன் போலிருப்பார்கள்.

அவர்களை எவரும் ஒன்றும் செய்ய முடியாது.

*நாம் வேறல்லர். அதை அறிவது அடக்கம்.*

நமக்கு அந்த அடக்கமிருக்குமா?



**வேலை**

✡ வேலைஎன்று ஆரம்பிக்குமுன் சூழல் கீழிறங்கினால் முதலில் அதை உயர்த்த வேண்டும்.

இன்று 11 மணிக்கு ஒரு நண்பன் வருகிறான்.

இரவு கனவு - விசேஷமில்லை - உடல் அடித்துப் போட்டது போலாயிற்று.

இப்படியிருந்தால் முதலில் சூழல் மேலே வரவேண்டும்.

அதை எப்படிச் செய்வது?

முதற்காரியமாக அதற்காக வருத்தப் படக்கூடாது.

எக்காரணத்திற்காக வருத்தப்பட்டாலும், எல்லாக் காரியங்களும் கெடும்.

குறைப்பட்டாலும் அதுவே பலன்.

எக்காரணத்தை முன்னிட்டும் வருத்தப்படக் கூடாது, குறைப்படக் கூடாது என்பது பெரிய சித்தி - சித்தி பெற்றவர்க்கே அது கஷ்டம்.

*சித்தி பெற்றவர் பெறாததை, பெற முடியாததை அன்னை அன்பர்கட்கு அருள் பாலிக்கிறார்.*

அன்னையை அழைத்தால் சூழல் மாறினால் நாம் சரியாக இருப்பதாக அர்த்தம்.

வருத்தத்தை நாடுவது மேல்மனம்.

வருத்தப்படக்கூடாதுஎன அறிவது உள்மனம்.

சந்தோஷப்பட வேண்டும்என அறிவது அடிமனம் - ஜீவியம் Consciousness.

சந்தோஷப்படுவது - அடிமனம் - பொருள் Substance.

அப்படி, சூழல் மாறினால் ஜெயித்து விட்டோம்என சந்தோஷப்படுகிறோம்.

மாறாவிட்டால் தோற்றோம்என வருத்தப்படுகிறோம்.

*சந்தோஷப்படுவதும், வருத்தப்படுவதும் நாம்.*

*நாமில்லாமல், சந்தோஷம் தானே உற்பத்தியாவது அன்னை.*

(It is causeless joy) இனம் புரியாத இன்பம் இகவாழ்வில் இறைவன்.

இதைத்தான் திட்டினால் தித்திக்கும்என்பது.

சண்டைஎன்பது நெருக்கம், அன்பாக நெருங்க முடியாதவர் நெருக்கத்தை விரும்பினால் சண்டை போடுவர்.

ஐக்கியத்தை அன்பாகப் பெறுவது உயர்வு.

ஐக்கியத்தை மட்டமாகத் தேடுவது அடி, உதை.

உயர்வோ, மட்டமோ, மனிதன் தேடுவது ஐக்கியம்.

வாழ்வும் ஐக்கியத்தை இரு வகைகளிலும் நாடுகிறது.

அதிர்ஷ்டம் வாழ்வின் நல்ல ஐக்கியம்.

தரித்திரம் வாழ்வுடன் தவறான ஐக்கியம்.

மனிதன் மனிதனுடன் நெருங்கி ஐக்கியமாக முனைகிறான்.

அதைச் செய்ய ஆரம்பிக்கும்பொழுது அவனை சந்தேகப்படுகிறான், அவனுடன் சண்டை போடுகிறான். அப்படி ஆரம்பித்து நெடுநாள் கழித்து அவனுடன் ஐக்கியமாகி நட்புக்கொண்டாடுகிறான்.

- **இறைவனுடன் அதுபோன்ற ஐக்கியம் சமாதி.**
- **மேல்மனம், உள்மனம், அடிமனம், சைத்தியபுருஷன் என்பவை 4 நிலைகள்.**
  - ⇛ **மேல்மனம் நமக்குரியது.**
  - ⇛ **உள்மனம் ரிஷிக்குரியது.**
  - ⇛ **அடிமனம் பிருந்தாவனத்தில் கிருஷ்ணலீலை செய்தது.**

    **சைத்தியபுருஷன், கிருஷ்ணாவதாரத்தின் அடுத்த உயர்ந்த கட்டம்.**

    - இந்த 4 நிலைகளையும் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரிக்கலாம்.

      மேலேயுள்ளது சிறியது - Consciousness.

      கீழேயுள்ளது பெரியது - Substance.



இந்த 8 நிலைகட்கும் உரிய உதாரணம் பூரணயோக ஞானம்.

அவை நம் வாழ்விலிருந்து ஏற்பட்டால், அதிகமாகப் புரியும், பலிக்கும். ஒரே நிகழ்ச்சியில் இந்த 8 உதாரணங்களும் நம் வாழ்வில் நடந்ததானால் அது பூரண ஞானம்.

ஒவ்வொன்றும் தலைகீழாக மாறும் - Reversal.

அந்த ஞானத்தை ஏற்பது சித்தி.

உதாரணங்கள்:-

1) முரண்பாடு உடன்பாடாவது மேல்மனத்தின் மேற்பகுதி - Consciousness. எந்தப் பிள்ளை எதையும் செய்ய மறுக்கிறானோ, அவனே பிறகு அதிகம் சம்பாதிப்பான். அது நடக்க நாம் அவனை வெறுக்கக் கூடாது. பொறுத்திருக்க வேண்டும். **பொறுமை 10 வருஷத்திலோ 10 நாளிலோ பூர்த்தியாகும்**. பொறுமை பூர்த்தியான க்ஷணம் பிள்ளை மாறுவான்.

2) பெருநஷ்டம், பெரிய எதிர்ப்பு பெரிய அதிர்ஷ்டம், அருளுமாகும். இது மேல்மனத்தின் ஆழம் - Substance.

   தொழிலதிபருக்கு வாரண்ட் வந்துவிட்டது. அத்துடன் எல்லாம் முடிந்துவிட்டது. நான் செய்த வேலைக்குரிய தண்டனையை நான் அனுபவிக்கிறேன்என ஏற்றுக் கொண்டான். வாரண்டை ரத்து செய்ய முயன்றபொழுது முதல்வர் பரிச்சயம் ஏற்பட்டு ஏராளமாகச் செல்வாக்குப் பெற்றனர்.

   - தவறான பாதைக்கும், நேரான பாதைக்கும் சட்டம் ஒன்றே.

     நாம் நல்லதை நாடவேண்டும்.

திருடனுக்கும், தொழிலதிபருக்கும் திறமை பொது.

3) நோன்பு, விரதம் (discipline, austerity) போன்ற வாழ்வு.

நெறியான வாழ்வு. நெறி கடுமையானது.

இது உள்மனத்தின் ஜீவியத்திற்(consciousness)க்-குரியது. முறை, நெறி பலன் தரும்.

பலனின் அளவு பர்சனாலிட்டி personalityயைப் பொருத்தது.

எந்த அளவு சித்தித்தாலும் முடிவை நிர்ணயிப்பது பர்சனாலிட்டி personality.

அதனால் பர்சனாலிட்டி personalityயைப் பெரிதாக்க வேண்டும்.

எந்த நல்லதும் - அறிவு, பொறுமை, நிதானம், etc. பர்சனாலிட்டியைப் பெரியதாக்கும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்திலுள்ளவரை, திருமணத்தைப் புறக்கணிக்க, சமூகம் மனிதனை அனுமதிக்காதுஎன்பது உண்மையானாலும் மனம் மனைவியை நாடுவதை மனிதனால் தவிர்க்க முடியாதுஎன்பதால் திருமணம் முன்னேற்றத்தைத் தரும் கருவியாகிறது.

***மனைவியை நாடும் மனம், முன்னேற்றத்தை நாடுகிறது.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

106. *பார்வையிலிருந்து விலகினால், மனத்திலிருந்தும் விலகுவாய்.*

✡ **உலகம் பார்வையினின்று விலகினால் உள்ளத்தில் மீண்டும் எழும்.**

107. *புதுதுடைப்பம் நன்கு பெருக்கும்.*

✡ **பழைய துடைப்பம் சமர்ப்பணத்தால் புதுதுடைப்பம்போல் பெருக்கும்.**

108. *அவசரத்தில் ஏறுபவர்கள் திடீரென வீழ்வர்.*

✡ **சமர்ப்பணம் அவசரத்திலும் விழாமல் மேலே எடுத்துச் செல்லும்.**

109. *ஆரம்பம் எப்படியோ முடிவும் அப்படியே.*

✡ **ஆரம்பம் எப்படியானாலும் முடிவை நாம் விரும்பும்படிச் செய்வது சமர்ப்பணம்.**

110. *மனித மனத்தில் நம்பிக்கை ஊற்று வற்றுவதில்லை.*

✡ **ஒரு நாள் மனிதன் தன்னைத் திரும்பிப் பார்ப்பான்என்ற நம்பிக்கையை அன்னை கைவிடுவதில்லை.**

*தொடரும்....*

❀❀❀

# T.V. சீரியல் - நடைமுறை, தத்துவம்

கர்மயோகி

"15 இலட்ச ரூபாயை எடுத்துப் போகும் பெண், ரோட்டில் கூட்டமாக இருப்பதைக் கண்டு, ஆட்டோ ரிக்ஷாவை விட்டிறங்கி கூட்டத்துள் போய்ப் பார்த்து வருவதற்குள் பணம் திருடு போய்விட்டது. அவள் நொறுங்கி நிலைகுலைந்து விட்டாள். அந்தப் பெண்மணிக்கு ஆறுதலும், ஆதரவும்தர அன்னை அருள் உதவுமா, அவளுக்கு நான் என்ன சொல்ல முடியும்" என்பது அன்பர் கேள்வி. இது கதை, எனினும் கருத்துக்கு அர்த்தம் உண்டு. நிஜமான வாழ்வில் ஒருவர் இதுபோல் பணமிழந்தால், அவர்கள் போலீஸ்க்குப் போவார்கள். இக்கதையிலும் போலீஸில் கம்பிளெயிண்ட் கொடுக்கிறார்கள்.

***அன்னை அருள் அனைவருக்கும் உண்டு.***

1. இப்பெண் அன்னை அன்பரானால், அன்னைக்குப் பிரார்த்திப்பதால் பணம் கிடைக்கும், பிரார்த்தனை செய்யுமுன், ஆட்டோவில் பணத்தை வைத்துவிட்டுப் போன தவற்றை உணர்ந்து வருந்தி பிரார்த்தனை செய்வது முறை.
2. அவர் மீது பற்று, கடமையுள்ள கணவன், உடன்பிறந்தவர், நண்பர் அவருக்காகப் பிரார்த்தனை செய்தாலும் பணம் கிடைக்கும். பிரச்சினைக்கு உரியவர் பிரார்த்தனை எளிதில் பலிக்கும். அடுத்தவர் பிரார்த்தனை பலிக்க அவர் பக்தி வலிமையுடையதாக இருக்க வேண்டும்.
3. அவர் வீட்டார், நண்பர்கள் அனைவரும் பிரார்த்தனை செய்தாலும் பலிக்கும். பலர் பிரார்த்தனை எளிதில் பலிக்கும்.

இவை நடைமுறை.

அன்பர் கேள்வி, "அவரறியாமல் ஒருவர் பிரார்த்தனை பலித்து பணம் வருமா"?



இது பணம் கிடைக்கும் என்பதைவிட பிரார்த்தனை பலிக்குமா என்ற கேள்வியை எழுப்புகிறது. நிச்சயம் பணம் வரும். அவர் எளிமையானவரானால் அவருக்கு அத்தொகையை இழக்கும் வாய்ப்பு வரும். அதை இழந்தால் பிரார்த்தனையால் மீண்டும் கிடைக்காது. ***எவர் பிரார்த்தனை செய்தாலும் அது நல்லெண்ணம். நல்லெண்ணம் பலிக்கும். அதனால் நஷ்டம் வாராது. ஓரளவு நல்லெண்ணமிருந்து அதை மீறி வலிமையாகப் பிரார்த்தனை செய்தால் மீறிய அளவில் பாதிக்கும்.***

4. ஆபத்திற்கு உதவும் எண்ணம் பாதிக்காது.
5. ஆத்ம வலிமையுள்ள அளவுக்குப் பாதிக்காது.
6. நல்லெண்ணம் உள்ள அளவுக்குப் பாதிக்காது.
7. கடமையுள்ள இடத்திலும் பாதிக்காது.
8. 'நான்' பிரார்த்தனை செய்தால் பலிக்கும்என்ற முனைப்போடு பிரார்த்தனை செய்தால் பணம் கிடைக்கும், 'நான்' அடிபடும் அளவில் பாதிப்பு எழும். பொதுவாக அது பணம் தொலைவதாகவே அமையும். ஆட்டோவில் தொலைந்தால் ஆச்சரியமில்லை. ***செயல் அதேபோல் தவறாது திரும்ப வரும்.***

அன்பர் கேள்வி, "எவருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும், என் பிரார்த்தனை அவருக்குப் பயன்பட்டு விடுதலை கிடைக்குமா? இது தொடர்ந்தும் நடக்குமா? இது அன்னையின் அருள் செயல்பட வேண்டிய வகையல்லவா"?

அன்பர் மகானாக இருந்து, காருண்யம் உடையவரானால், அவர் வலிமை இப்பலனை நிர்ணயிக்கும். தம் ஆத்ம வலிமையை மீறியும் அவர் செயல்படலாம், அதற்குள்ளும் செயல்படலாம். தம் வலிமைக்குள் செயல்பட்டால், பாதிப்பு இருக்காது. யோகத்திற்காக தாம் சேகரித்த வலிமையை அவதிப்படுபவருக்குக் கொடுப்பதாக அமையும். வலிமையை மீறிச் செயல்பட்டால், அந்த அளவுக்குப் பாதிக்கும். மகான் செயல்படச் சட்டம் உண்டு. பிரச்சினை அவரிடம் வந்துவிட்டபின் பணத்தை இழந்தவர் பிரார்த்தனை எளிதில் பலிக்கும். இழந்தவர் பிரார்த்தனை

உதவியின்றி பலிப்பதைவிட மகான் விஷயம் அறிந்ததால் எளிதில் பலிக்கும். எவருக்கும் பாதிப்பு இருக்காது. மகான்என்பவர் அந்த லிமிட்டிற்குள் செயல்படுவது முறை. அது சட்டம். பகவான் யோகத்தில் இந்த அம்சத்தைப்பற்றி எழுதும்பொழுது சிஷ்யர்கள் குருவுக்கு இலஞ்சம் கொடுக்கவே பிரியப்படுகிறார்கள்என்று எழுதுகிறார். ஜட்ஜ் கட்சிக்காரருக்கு, சட்டப்படி நியாயம் வழங்கலாம். சட்டத்திலில்லாத சலுகையைச் செய்வது சரியில்லை. மாணவர் ஆசிரியரிடம் பாடம் கற்பதைவிட கேள்வித்தாளை எதிர்பார்ப்பது வழக்கம்.

ஓர் அன்பர் ஆன்மீக வலிமை ஏராளமாக உள்ளவரானால், அவருக்கு நாட்டுப் பற்று, குடும்ப இலட்சியம், தொழில் முன்னேற்றம் எவையும் பொருட்டல்ல, பிறர் பிரச்சினையைத் தீர்ப்பதுமட்டுமே குறிக்கோள் என்றிருந்தால்,

1) அவருடைய வலிமை 100பேர் பெரிய பிரச்சினையைத் தீர்க்கும்எனில், அவர் செய்யலாம். அவரைப் பாதிக்காது.
2) பிறருக்கு இது அவர் செய்யும் ஆன்மீகச் சேவையென அவர் நம்பினால் அது உண்மையன்று. ஒருவர் மாதம் 50 இலட்சம் சம்பாதிப்பதால் அண்ணன், தம்பி, தமக்கை, தங்கை குடும்பங்களை முழுப்பொறுப்பு ஏற்று நடத்த முன்வந்து நெடுநாள் செய்வது அவரைப் பாதிக்காவிட்டாலும், அக்குடும்ப இளைஞர்கள் சொந்தமாகச் சம்பாதிக்கும் திறனை இழந்து நலிவார்கள். அதுபோல் ஆன்மீகச் சேவையை ஒருவர் செய்தால், சேவையைத் தொடர்ந்து பெறுபவர் சொந்த ஆன்மீக முன்னேற்றத்தை இழப்பர். இது சிறுபிள்ளைத்தனம் என அன்னை கூறியுள்ளார். பகவான் புதுவை வந்த ஆரம்பத்தில் ஒருவர் தம் மனைவிக்குள்ள நோயைக் குணப்படுத்தும்படிக் கேட்டார். “அது என் கடமையில்லை” என பகவான் கூறினார்.

விதிவிலக்கு: மேற்சொன்னதுபோல் நடக்கும் ஒருவர் அந்த நோக்கத்தை ஆன்மீக இலட்சியமாக ஏற்றால், அவருடைய ஆன்மீக முன்னேற்றத்திற்குரிய பாதையாக அந்தச் சேவையை மேற்கொண்டால் அவர் ஆன்மா வளரும், அவர் யோகமோ, வாழ்வோ அதனால்



பாதிக்கப்படாது. ***ஆனால் தவறாது ஒரு பலன் உண்டு.***

***ஆன்மீகப் பலன் பெற்ற அனைவரும் ஒன்று சேர்ந்து பலன் கொடுத்தவரை ஊரை விட்டு விரட்டுவர், உயிரை எடுப்பார்கள், சூன்யம் வைப்பார்கள், பொல்லாத கெட்ட பெயர் எழும்.*** இது தவிர்க்க முடியாத பலன். இவற்றையும் மீறி அவர் ஆன்மா வளர்ந்தபடியிருக்கும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்திலிருந்து சைத்தியபுருஷனுக்குப் போவது என்பது ஆசையால் பீடிக்கப்பட்டவன் அதை மீறி வந்து அதன் பலனைச் சிந்திப்பது போலாகும்.

***ஆசையை விலக்கி, பலனை நினைப்பது மனத்திலிருந்து சைத்தியபுருஷனுக்குப் போவதுபோன்றது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜடம் சக்தியால் முழுவதும் ஆளப்படுகிறது. நாம் அதைவிட்டு விலகியுள்ளோம். மனத்தால் அதை அறிய முற்படுகிறோம். அதனால் நமக்கு சக்தியின் முழுமை விளங்குவதில்லை.

***சக்திக்குட்பட்ட ஜடத்தை மனத்தால் புரிந்துகொள்ள முடியாது.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**955) நிலைக்குரிய தரமுண்டு. தார்மீக எண்ணங்கள் மனத்திற்குரியவை. மற்ற நிலைக்குப் பொருந்தா.**

***நிலைக்குரிய தரம் உண்டு.***

✡ விலங்கின் சாதனை உயிர் வாழ்வது (survival).
மனிதன் சாதனை வாழ்க்கை வளம்பெருகி வாழ்வது.
தெய்வம் சாதிக்க விரும்புவது பரிணாமம்.

வாழ்வு பரிணாமத்தால் மனமாகவும், ஆன்மாவாகவும் வளர்வது விலங்கிற்குரிய தரமும், மனிதனுக்குரியதும், தெய்வத்திற்குரியதும் அடுத்த அடுத்த உயர்ந்த கட்டங்களைச் சார்ந்தன.

✡ குழந்தை கட்டுப்பாடாக வளர வேண்டும் - கட்டுப்பாடு திறமையை வளர்க்கும்.
குழந்தையைச் சுதந்திரமாக வளர்க்கலாம் - சுதந்திரம் பண்பையும், அன்பையும் வளர்க்கும். திறமை பண்பிற்கு உட்பட்டது.

அச்சுதந்திரம் பெற்றோர்தரும் சுதந்திரமானால் பண்பாக அன்பாகக் குழந்தை வளரும்.

அதே சுதந்திரம் குழந்தை விரும்பும் சுதந்திரமானால், குழந்தை மேதையாக வளரும்.

தெய்வம் விதித்த சுதந்திரமானால் குழந்தை தெய்வமாகி, தெய்வ நிலையைக் கடக்கும்.

***நிலையுயர்ந்தால், தரம் உயரும்.***



✡ நிலைகள் பல.

மனிதன் குடும்பத்தையொட்டி வளரலாம் - திறமைசாலியாவான்.

ஊரையொட்டி வளரலாம் - தலைவனாவான், பண்பு பெறுவான்.

இலட்சியத்தை நாடி வளரலாம் - முன்னோடியாவான்.

நாட்டை முதன்மையாக்கி வளரும் மனிதன் நாலு வகைகளிலும் திறமையும் பண்பும் பெற்று தலைவனாக முன்னோடியாவான்.

ஆன்மாவையொட்டி வளரும் மனிதன் முனி, தபஸ்வி, ரிஷி, யோகியின் மார்க்கத்துள் நுழைவான்.

வளரும் ஆன்மாவை மையமாக்கிய மனிதன்,

❀ சூழலின் திறம்படச் செயல்படுவான்.
❀ குடும்பத்தில் எடுத்துக்காட்டாக எழுந்து நிற்பான்.
❀ ஊருக்கு முன்னோடியாவான்.
❀ நாட்டுக்கு நல்லவனாவான்.
❀ ஆன்மீகமும் அவனுக்குரியதுஎன்றாலும்

அவன் வளரும் ஆன்மா நாடுவது வாழ்வு, அது

❀ குடும்ப வாழ்வில் குதூகலம் எழுப்பும்.
❀ உற்றார் உறவினரில் சுபிட்சத்தை வளர்க்கும்.
❀ ஊரில் வன்முறையைத் தவிர்க்கும்.
❀ நாட்டில் நல்லது வெற்றிபெற அவனை அனைவரும் நாடித் தலைமையை ஏற்கச் சொல்வார்கள்.
❀ அவனுள்ள இடத்தில் அஹிம்சை அன்பாக வெளிப்படும். ஹிம்சைக்கு எதிராக இருக்காது.
❀ அவன் செயல் சத்தியத்தின் அஸ்திவாரத்தை ஏற்படுத்தும்.
❀ சத்தியம் தானே வலுப்பெற்று எதிரானது இயல்பாக விலகும் வலிமை அவனுடையது.
❀ தீமை அவனுள்ள இடத்தில் வெற்றி பெறாது, செயல்பட முடியாமல் தவிக்கும், தன்னைத் தானே எரிக்கும் நிலையை எய்தும்.

❀ ❀ ❀

**956) செயல்கள்போன்ற இவ்வமைப்புகள் கருவிகள். பண்புக்கும் தார்மீக எண்ணத்திற்கும் இவற்றிற்கும் தொடர்பில்லை. அதுவும் அவை வேறு நிலையைச் சேர்ந்தவையானால் தொடர்பேயிருக்காது.**

***பண்பு பலனை நிர்ணயிக்காது.***

எய்தவனை மறந்து அம்பை நோவதில் பலனில்லைஎன்பது தொன்றுதொட்ட சொல். பழைய மாணவர் வாழ்வில் உயர்ந்த நிலையடைந்து பின் பள்ளி, கல்லூரி விழாவுக்கு வந்தால் இன்று நான் உயர்ந்த நிலையிலிருப்பது இந்தப் பள்ளியால்தான்என்பார்கள். **பள்ளியும், கல்லூரியும், கருவிகளே, கர்த்தாவாகா**.

வாழ்வுஎன்பது பெருஞ்சமுத்திரம். சம்சார சாகரம்என்பார்கள். நாம் அன்றாடம் சந்திப்பவை பல; பயன்படுத்துபவை ஏராளம். அவற்றை நாம் கருதுவதில்லை. கடை, பாங்க், பஸ், போன் போன்றவை ஸ்தாபனங்கள் (organisation). கத்தி, நோட்டு, பேனா, மிக்ஸி, பல்பு போன்றவை பொருள்கள். நாணயம், விஸ்வாசம், துரோகம், நம்பிக்கை, நல்லெண்ணம், கெட்டஎண்ணம் என்பவை பண்புகள், குணங்கள், பண்பாலான குணங்கள். மானம், அந்தஸ்து போன்றவை சொரணைகள் (sensitivities).

***இவையனைத்தும் கருவிகளாகும்.***
***இவற்றிற்கு நல்லது கெட்டதை நிர்ணயிக்கும் திறனில்லை.***

- ✡ போலீஸ்காரன் போக்கிரியிடமிருந்து காப்பாற்றினால் போலீஸை நாம் பாராட்டுகிறோம்.
- ✡ ஆபத்தான வியாதி வந்தபொழுது பெரும்பணம் காப்பாற்றுகிறது. பணத்தின் முக்கியத்தை அதனினின்று அறிகிறோம். அதன் மகிமை அப்பொழுதுதான் தெரிகிறது.
- ✡ கடைசி காலத்தில் பிள்ளைகள், பெண்கள் இரவு பகலாகச் சேவை செய்து அன்பை வெளிப்படுத்துகிறார்கள். பெற்ற பாசத்தை அறிகிறோம்.
- ✡ 8 வருஷமாக வாடகை தாராமல், வீட்டைக் காலி செய்ய மறுப்பவர் போக்கடா. அந்த ஊருக்கு வந்த ஜட்ஜ் நம்மைத் தேடி வருகிறார். "நான் உங்கள் தகப்பனாரால் முன்னுக்கு வந்தேன்" என்கிறார். நம் குடியிருப்பவரை அழைத்து நல்ல உபதேசம் செய்கிறார். வீடு காலியாகிறது. நமக்கு பதவியின் பெருமை தெரிகிறது.



- ❀ ஸ்தாபனங்களும், பொருள்களும், பண்பும், குணமும் கருவிகளேயாகும்.
- ❀ இவற்றிற்கு நல்லது கெட்டதுஎன்ற பாகுபாடில்லை.

  நல்ல காரியத்திற்குப் பயன்படும் விஸ்வாசம் கொலை செய்யவும் பயன்படும்.

  கொலைகாரனுக்கு அவன் நண்பன் விஸ்வாசமாக இருப்பான்.

  (**நான் விஸ்வாசம், உயர்ந்த குணம், கொலை செய்யப் பயன்பட மாட்டேன்எனக் கூறாது**).
- ❀ இலஞ்சம் கொடுக்கப் பணத்தை எடுத்தால் நான் லட்சுமி, தனலட்சுமி, இலஞ்சம் தவறான செயல். நான் அதற்கு உடந்தையாக இருக்கமாட்டேன்எனக் கூறாமல் பணம் திருமணத்திற்குப் பயன்படுவதுபோல இலஞ்சத்திற்கும் அமைதியாகப் பயன்படும்.
- ❀ மனிதனுக்குப் பாகுபாடுண்டு, நிர்ணயிக்கும் திறன் உண்டு. ஆன்மீகம் உள்பட அனைத்தும் கருவிகளேயாகும். ஆன்மீகத் திறனை பிறரைக் கொலை செய்ய, சித்ரவதை செய்ய மந்திரமாகப் பயன்படுத்துகிறார்கள்.

⇒ ***மனிதன்மட்டுமே உயர்ந்தவன்.***
***மற்றவையெல்லாம் கருவிகளே.***
***பண்புகள் உள்பட வெறுங்கருவியாகும்.***

❀ ❀ ❀

*தொடரும்....*

**ஜீவிய மணி**

**அறிவில்லாத மனத்திலும் ஆன்மா அற்புதம் நிகழ்த்தும்.**

# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்யமயி பரமே!*
*ஓம் ஸ்ரீ அரவிந்தோ மிர்ரா!*

இறைவடிவான என் இனிய அன்னைக்கும், ஸ்ரீ அரவிந்த பகவானுக்கும் முதல் என் நன்றியை சமர்ப்பணம் செய்கிறேன். என் வாழ்க்கையில் அன்னையை நான் அழைத்து நிறைய சம்பவம் நடந்துள்ளது. அதில் இப்பொழுது இந்த மாதம் நடந்த ஓர் ஆச்சர்யம்.

என் அக்காவும், மாமாவும் திருநின்றவூரில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு 2 குழந்தைகள். மாமா Metrowater-Nungampakkamத்தில் வேலை செய்கிறார். அரசு உத்யோகம்தான். அவருக்கு sugar 2 வருடமாக இருக்கிறது. முதலில் இருந்தே அவர் sugar normalலாகவே இருக்கும்படி full dietல இருப்பார். அவர் - எல்லாவற்றிலும் - நேரம் தவறாமை, உண்மை, சேமிப்பு இப்படி நல்ல குணங்களுடன் அவர் வாழ்வில் முன்னேறி இடம் வாங்கி 2 வீடு கட்டி குழந்தைகள் futureக்காக savingsசும் செய்து நன்றாக வாழ்கிறார்கள். அவர் வீட்டிலும் அன்னையை வைத்து பிரார்த்தனையும் செய்கிறார்கள். மாமாவிற்கு கடந்த October (2008) மாதம் viral fever வந்தது. பிறகு அது டைபாய்டாக மாறியது. ஒரு 10 நாள் ஆகிவிட்டது. 2, 3 நாட்களாக vomitடும் இருந்தது. தண்ணீர்கூட வயிற்றில் தங்க வில்லை. 2 நாட்களாக urineனும் போகவில்லை. Urine சிறிது போனால் கூட குங்குமக் கலர்ல urine வந்தது. உடனே கெல்லீசில் இருக்கும் A.K.N. மருத்துவமனையில் admit செய்தனர். அங்கு doctor பரிசோதித்து இரு கிட்னியும் வேலை செய்யவில்லை. கிட்னிதான் bloodடையும், urineஐயும் பிரிக்கிறது. கிட்னி வேலை செய்யாததால் urine bloodல கலந்து விட்டது, urine போனால் blood colour வர ஆரம்பிக்கிறதுஎன்று கூறினார். இவ்வளவு சிறு வயதில் இப்படி ஆகிவிட்டதுஎன அனைவரும் மிக கவலை அடைந்தோம். Doctor கிட்னி இரண்டுமே failureராக இருக்க chance இருக்கு. Dialysis செய்து பார்ப்போம்என்று கூறினார். என் அக்காவிற்கும், அவருக்கும் என்ன ஆறுதல் சொல்லி சமாதானப்படுத்துவதுஎன்று எங்களுக்குப் புரியவில்லை. பிறகு நான் November மாதம் 3ஆம் தேதி 2008 அன்று அம்பத்தூர் தியான மையம் சென்று அன்னையிடம் இந்தப் பிரச்சினையைச் சொல்லி அழுதுவிட்டு அன்னையிடம் மாமாவை குணமாக்க ஒப்படைத்துவிட்டு, அன்னையை அந்த மருத்துவமனைக்கு அனுப்பி பிரார்த்தித்தேன். 5 நாள் பிரார்த்தனையும் மேற்கொள்வதாக 4/11/08 to 8/11/08 வரை செய்ய முடிவுசெய்து வெளியே வந்தேன். வெளியே வந்தால் எங்கள் அம்பத்தூர் தியான மையப் பொறுப்பாளரை சந்தித்தேன். அவரிடம் கூறினேன். அவர், “மதரை அங்கு அனுப்சுடு, மதர் கிட்ட ஒப்படைத்து விடு இந்த விஷயத்தை. கவலைப்படாமல் இரு. மதர் பார்த்துப்பாங்க. உங்க மாமாவிற்குச் சரியாகிவிடும்னு” கூறினார். அவர் கூறியது அன்னை என் முன் வந்து கூறியதுபோல் மிகவும் ஆறுதலாக இருந்தது. 4-ஆம் தேதி முதல் நாள் பிரார்த்தனை முடிந்தது, 5ஆம் தேதி தியானமையம் வந்து பிரார்த்தனை முடிந்து வீட்டுக்குச் சென்று அக்காவிடம் phone பேசினேன். அவரிடம் “கவலை படாமல் இருங்க. இந்த 5 நாள் பிரார்த்தனையில் ஏதாவது ஒரு change, ஒரு improvement கிடைக்கும். Mother வருவாங்க” என்றும், மாமா இந்த 5 நாளில் “Refresh ஆகவும் தெம்பு, புதிய ஒரு வித தெம்பு வரும்”னு கூறி Mother கிட்ட pray பண்ணலாம் கண்டிப்பாகச் சரியாகும்என்று கூறி ஆறுதல் சொல்லிவிட்டு, phoneஐ வைத்து விட்டேன். 6ஆம் தேதி காலை 6 மணிக்கெல்லாம் அக்காவிடம் இருந்து phone. (அதற்கு முன் ஒரு விஷயம் மாமாவிற்கு hospitalலில் தினமும் dialysis செய்யப் பட்டது. தினமும் urine 25 ml மேல் தாண்டாது. 5 ml, 10 ml, 25 ml தான் ஒரு நாளைக்கே urine போனார். Dialysis செய்யும்போது மட்டும் தான் கிட்னி வேலை செய்தது).

காலை 6 மணிக்கு என் அக்கா phone செய்தார். மாமாவிற்கு ஒரு கனவு வந்ததாகக் கூறினார். அதில் வெள்ளை உடையில் ஒரு பெண் உருவம் வந்து மாமாவைத் தட்டி எழுப்பி ஒரு மருந்து கொடுத்தாராம். பிறகு ‘படு படு’ என்றார். பிறகு எழுந்திரு vomit பண்ணு. மறுபடியும் படு எழுந்திரு இந்த மருந்தைக் குடி, வாந்தி எடு என்றாராம். கட்டிலில் இருபுறமும் ஒரே வாந்தியாம். பிறகு படு படு

என்று கூறி அவர் மறைந்து விட்டாராம். உடனே மாமாவிற்கு விழிப்பு வந்து மெத்தையில் வாந்தியைத் தேடினாராம், ஈரமாக இல்லை. என்ன கனவு என்று நம்ப முடியவில்லையாம். நிஜமாக நடந்ததுபோல் தோன்றியதாம். பிறகு அக்காவை எழுப்பி இந்தக் கனவு வந்ததாகக் கூறிவிட்டு அவரே எழுந்து bathroom சென்று 100 ml urine போனாராம். நம்பவே முடியலை, Doctorரும் ஆச்சர்யப் பட்டார். மாமா urine போய்விட்டு வந்ததும் அக்காவிடம் சொன்னாராம் "எனக்கு refresh ஆனா மாதிரி இருக்கு, புது தெம்பு வந்தா மாதிரி இருக்கு" என்று கூறினார். உடனே அக்கா "இதையே தான் யாமினி (நான்)யும் சொன்னாள். என்ன ஆச்சர்யம் அவள் கூறியதை அப்படியே சொல்கிறீர்கள். என்ன அதிசயம்''. அக்கா என்னிடம் இவற்றையெல்லாம் கூறி அழுதே விட்டார். இப்பொழுது மாமாவிற்கு கிட்னி நல்லா function ஆகுது. Daily urine, motion போகிறார் vomit இல்லை. Normal ஆயிட்டார். மாமா என்னிடம், "ஏதோ ஒரு பெரிய சக்தி இருக்குமா அன்னையிடம். நான் discharge ஆகி வீட்டிற்குப் போகும் முன் அம்பத்தூர் தியான மையத்திற்கு வந்துவிட்டு பிறகுதான் வீட்டுக்குப் போவேன்"என்று கூறினார். அவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டார். அன்னையின் அருள் எவ்வளவு விரைவாக நமக்குக் கிடைக்கிறது. நாம் எப்போது அன்னையை அழைத்தாலும் அவர் வரத் தயாராய் உள்ளார். நாம் தான் அழைப்பதில்லை. அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அக்கா எனக்கு நன்றி சொன்னாள். நான் எனக்கு எதற்கு நன்றி அன்னைக்கு நீ நன்றி சொல் என்றேன். அக்கா வீட்டில் Motherக்கு symbol போடுவதாகவும் pray பண்ணினோம். மாமா வீட்டிற்கு வந்ததும் hall முழுவதும் பெரிய symbol போடணும்னு மாமா கூறினார். அன்னையின் அருளைப் பெற இந்த ஒரு ஜென்மம் போதாது. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அன்னையின் அன்பராகப் பிறக்க ஆசைப்படுகிறேன். ''மாமா நல்லடியாக discharge ஆக வேண்டும்என்று பிரார்த்தித்துக்கொண்டு இக்கட்டுரையை முடிக்கிறேன்''.

"ஓம் நமோ பகவதே!"

*- S.யாமினி சிவராமகிருஷ்ணன், சென்னை*

❀ ❀ ❀



# பூரண யோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## (18) யுகம் க்ஷணமாகும்

**புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும்என்பது சத்தியஜீவன்என்ற 55ஆம் அத்தியாயத்தின் (*The Life Divine*) மையக் கருத்து.**

இந்த அத்தியாயத்தின் இதர முக்கிய கருத்துகள்.

- ✡ சத்தியஜீவியம் தெய்வீகமனத்தின் கடவுள்கள்மூலம் அறியாமையின் சத்தியத்தை நாடுகிறது அறியாமையில் வாழும் நம் அடிப்படை சத்தியம். அதை சத்தியஜீவியம் கடவுள்கள்மூலம் நெருங்குகிறது.
- ✡ பிரபஞ்சத்தை சத்தியஜீவியம் தனி மனிதனாக்குகிறது. அதுவே பிரம்மத்தையும் மனிதனாக்குகிறது.
- ✡ **புறத்தை அகமாக மாற்றுகிறது.**
- ✡ ஆத்மாவிலிருந்து வந்த ஜடம், ஆத்மாவை வெளிப்படுத்துகிறது.
- ✡ புறத்தை அகம் கட்டுப்படுத்தும் திறமையையும், வலிமை ஆனந்தமாக்கும் திறமையையும் அது உடையது.
- ✡ **எதையும் சாதிப்பது சத்தியஜீவிய இலட்சியமில்லை. இருப்பதே அதன் இலட்சியம்.**
- ✡ பக்தி ஆர்வம் ஆனந்தப் பூரிப்பாகிறது.
- ✡ ஜீவன் புருஷனாக மாறுகிறது.
- ✡ ஆத்மாவுக்கு ஞானம் இயல்பாகவுண்டு. அது ஞானத்தைத் தேட வேண்டாம்.

இது முடிவான சித்தி. சத்தியஜீவன் பிறந்த பிறகு எழும் சித்தி. **ஆத்மபக்குவம் உள்ளவர்க்கு அதுவும் ஓரளவு கண்ணில் படும்**. அவர்கட்கு யோகம் பலிக்கும். 16ஆம் நெம்பர் இதே கருத்தை அகம், புறம் என்ற நோக்கில் கூறிற்று. இது காலம் என்ற நோக்கில் பேசுகிறது.

- ✡ ஒரு வகையில் இரண்டும் ஒன்றானாலும், வேறு வகையில் அது

மாறுபடும். வேஷ்டிஎன்பதை ஆண்கள் இடுப்பில் உடுத்தும் உடை எனக் கூறலாம்.

பேண்ட் என்பதையும் அப்படிக் கூறலாம்.

அரைக்கால் சட்டையையும் அப்படிக் கூறலாம்.

ஒரே விளக்கம் மூன்றுக்கும் பொருத்தமானாலும், மூன்றும் வெவ்வேறானவை.

✡ அதுபோல் யுகம் க்ஷணமாகும்என்பதும், அகம் புறத்தை ஆளும் என்பதும் மூன்றாம் நிலைக் காலத்தில் க்ஷணத்தில் காரியம் முடியும் என்பதும் ஒரே நிகழ்ச்சியை காலத்தாலும், அகம், புறம்என்பதாலும், காலத்தை வெல்ல முடியும்என்ற கருத்தாலும் கூறுகிறோம். இவற்றைத் தொடர்ந்தால் வெவ்வேறு இலட்சியங்கள் கூடி வரும்.

1) காலம் தன்னையிழக்கும்.

2) புறம் அகத்துள் மறையும்.

3) மனிதன் காலத்தை வெல்வான்.

நெம்பர் 28 நினைத்தால் நடக்கும்என்பது. அது இதே நிகழ்ச்சியை உடல் உயர்ந்து மனமாகும்என்று விளக்குகிறது. நெம்பர் 32 அருள் பேரருளாகும்என்பது மனிதன் கர்மத்தை நம்பாமல் அருளை நம்பி, பிறகு தன் திறமையில் உள்ள நம்பிக்கையை இழந்து அருளை நாடும்பொழுது அருள் பேரருளாகும்என்று கூறுகிறது. நெம்பர் 23 ஜடம் சூட்சுமமாகி, காரணலோகமாகிறது என்பதும் இதையே கூறுகிறது எனலாம். அது லோகங்கள் நோக்கில் கருத்தை எடுத்து கருத்து ஒரு லோகத்தினின்று அடுத்த லோகம் போகும்பொழுது என்ன மாற்றம் ஏற்படுகிறதுஎன்ற கோணத்தில் பேசுகிறது.

### (19) அணுவிலிருந்து ஆனந்தம் எழும்

ஒரு வகையான பூட்டில் 8 அல்லது 10 நம்பர் இருக்கும். அந்த நம்பரை மாற்றலாம். உருட்டினால் மாறும். அப்பூட்டிற்கு ஒரு நம்பர் உண்டு. அந்த நம்பரை வைத்துத் திறந்தால் பூட்டு திறக்கும். மற்ற எந்த நம்பருக்கும் திறக்காது.



✡ அனந்தம் - பிரபஞ்சம், பிரம்மம் - அணுவாயிற்றுஎன்பது தத்துவம்.

✡ அணு, அணுவாகவேயிருக்கும். அதற்குரிய இரகஸ்யம் நமக்குத் தெரிந்தால் அணுஎன்ற பூட்டு திறந்து அனந்தத்தை வெளிப்படுத்தும்.

✡ **அன்னையை மனத்தின் ஆழத்தைக் கடந்த நிலையில் உருக்கமாக நினைப்பது அந்த இரகஸ்யம்.**

✡ அந்த இரகஸ்யத்திற்கு ஆயிரம் வடிவங்களுண்டு. தூய்மை பூரணமாகி - எதிரையும் ஏற்றதால் பூரணம் பெற்று - perfection சிறப்பெய்துவது அந்த இரகஸ்யம்.

✡ ஆன்மாவின் அம்சங்கள் 12.

அதன் மறுஉருவங்கள் ஏராளம்.

எந்த உருவத்தின்மூலமும் அந்த அம்சங்களை எட்டலாம்.

எட்டியவுடன் அணு தன் சுயரூபமான பிரம்மத்தை வெளிப்படுத்தும்.

**ரூபம் எதுவானாலும் மூலம் ஒன்றே.**

❀ திறமை, பொறுமை, விஸ்வாசம், நன்றி, முறை, அடக்கம், சுத்தம், பணிவு, நேர்மை, தூய்மை, வெற்றி, பிரபலம், பெருந்தன்மை போன்ற எந்தக் குணம்மூலமும் சத்தியம், ஐக்கியம், நன்மை, ஞானம், திறமை, அன்பு, அழகு, ஆனந்தம், அனந்தம், காலம் கடந்தநிலை, உண்மை, மௌனம், சாந்தி ஆகிய ஆன்மீக அம்சங்களை அடைய முடியும். அது திறவுகோல்.

நமக்கு பிரார்த்தனை பலிக்கும்பொழுது இந்த இரகஸ்யத்தின் மூலம் பலித்தால் அது யோகம் சித்திக்கும் அறிகுறிஎன கண்டு கொண்டால், நாம் வாழ்வைவிட்டு யோகத்திற்குப் போகலாம். சர்க்கார் வேலையில் பிரமோஷன் முறைப்படியே வரும். ஒரு கட்டம் கடந்து பிரமோஷன்பெற, சட்டம் இடங்கொடுக்காது. தனியார் வேலையிலும், அரசியலிலும் திறமை சட்டத்தைமீறிப் பலன் பெறும். 8-ஆம் நிலை வேலையிலிருக்கும்பொழுது இலாக்காத் தலைவராகும் திறமை பெற்றவர் உண்டு. அன்பர்கள் அந்நிலையை எய்துகிறார்கள். அதைப் பெற முயன்றால் ஏதாவது ஒரு ரூபத்தில் அது பலித்து விடும். நாம் வேலை செய்யுமிடத்தில் சட்டம் இடம் கொடுக்காவிட்டால், அதற்குரிய இடம் வந்து நம்மை உயர்த்தும். இது வாழ்வில் முன்னேற்றம். **மனம்**

**நம் திறமைக்குரிய பரிசை நாடாவிட்டால் கதவு திறந்து அன்னை தன்னிடம் நம்மை அழைத்துக் கொள்வார்.**

✡ அனந்தம் வாழ்வில் பலிப்பது அபரிமிதம், அதிர்ஷ்டம்.

✡ வாழ்வைக் கடந்து அன்னை பலிப்பது அருள், யோகம்.

✡ அனந்தம், நம் மனநிலைக்கேற்ப, அதிர்ஷ்டமாகவோ, யோகமாகவோ சித்திக்கும்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

(Perfection) பூரணச் சிறப்பு நாமுள்ள நிலையில் பிரம்மத்தை வெளிப்படுத்தும். அத்துடன் அடுத்த நிலைக்கு நம்மை அழைத்துச் செல்ல வல்லது.

***சிறப்பு நிலைக்குரிய பிரம்மம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சைத்தியபுருஷனை அடைய நாம் இதயத்தின்பின்னால் மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டும். வெளி நோக்கிச் செல்லும் சக்திகள் ஒரிடமாகச் சேர்ந்தால்தான் அது முடியும்.

***புறநோக்கு அகநோக்காகும்.***





# மனிதனும் மிருகமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

சியாமளா ராவ்

மாமி, அவளுக்கு ஒரு வீட்டில் காலை சமையலுக்கு ஏற்பாடு செய்திருந்தாள். அந்த வீடு, பார்வதியின் கணவன், யாருக்குக் குழந்தையைக் கொடுத்து, பணம் வாங்க நினைத்தானோ, அதற்குப் பக்கத்து வீடு.

அதையறிந்த பார்வதியின் மனதுக்குள் எந்த சஞ்சலமும் ஏற்படவில்லை. அன்னையின் விளையாட்டு, 'எல்லாம் நன்மைக்கே', அன்னையின் எண்ணங்களை, நமக்குத் தரும் சில சந்தர்ப்பங்களைப் பற்றி அலச, நாம் யார்? நம்மையே அலசி, நல்லவைகளை நமக்குத் தந்து, அல்லாதவைகளைத் தூக்கியெறியச் செய்யும் அன்னையின் லீலைகளை யாரே அறிவர்?

அறியக்கூடாது. அறியவும் முடியாது. அதற்கான வழிவகைகளை நாம் செய்யவும் கூடாது.

"அன்னை" என்பவர் யார்? அவர் அனைவருக்குமே தாயாவார். தாய்க்கு, தன் குழந்தைகளுக்கு, எது சரி, எது தப்புஎன்று சொல்லத் தெரியாதா? நல்ல வழிக்கு அழைத்துச் செல்லத் தெரியாதா? அவற்றையெல்லாம் நேரிலா சொல்வார்? மாட்டார். எல்லாவற்றையும் சூசகமாகவே செய்துவிடுவார். அதை உணரும் சக்தி, அன்னையிடம் நமக்கு எவ்வளவு பக்தியும், உண்மையும் இருக்கிறதோ... அதற்கேற்ப... நிச்சயம் நமக்குக் கிடைக்கும். இது உறுதி.

பெற்ற தாயார், குழந்தையிடம்... இது மிளகாய். வேண்டாம் எடுக்காதே. அதைத் தொட்டு, கண்களைத் தொடாதே, என சொல்கிறார்என்றால் எதற்கு? குழந்தைக்கு, மிளகாய் காரம், அது எரிச்சலைத் தரும்எனத் தெரியாது. அதனால் தாய் சொல்கிறாள் அது காரம்என்று.

அதே போல்தான் அன்னை, வளர்ந்த குழந்தைகளாக நம்மை பாவிக்கிறார். அதனால், நம்மிடமுள்ள நல்லவை அல்லாதவைகளை

விலக்கப் பலவிதங்களிலும் வழிகாட்டுகிறார். அந்த நல்வழிகளை நாம் ஏற்றுக் கொள்வதும், ஏற்காததும் நம் பொறுப்பு. நம் பொறுப்பிற்கேற்ப, நம்மை அணைப்பதும் அன்னைதானே. நாம் காரம்என்று தெரிந்தும் சில விஷயங்களை ஏற்கிறோம்என்றால், அது நம் பொறுப்பு. அன்னை மறுப்பதையும், மறுக்கும் நாம், நம்மிஷ்டப்படி நடப்பது, பிறகு காரியம் கைகூடவில்லைஎன்று அன்னையிடமே முறையிடுவதுஎன்பது சரியா? யோசித்துப் பார்க்க வேண்டும்.

அன்னையிடம் முறையிடுங்கள். அது தவறே அன்று. நம் அத்தனை மனக்கிலேசங்களையும், ஆதங்கங்களையும், அன்னையிடமே கொட்டித் தீர்க்கலாம். ஆனால், அந்த மனக்கிலேசங்களோ, ஆதங்கங்களோ, நம்மால், நம் சுய எண்ணங்களால், சுயநலங்களால் ஏற்பட்டதுஎன்றால், அதை நமக்கு நாமே, நம்மை, வாசனை சோப்பு போட்டு சரீரத்தை மணமாக்கிக் குளிப்பதைப் போல், நல்லெண்ணங்களை நமக்குள், சரீரம் முழுவதும் ஊடுருவச் செய்து, நம்மை நாமே புடமாக்கிக் கொள்ள வேண்டாமா?

இது உடனே சாத்தியமா? முடியுமா? குடும்பச் சூழ்நிலையில் இவையெல்லாம் நடக்குமா?

நடக்க வைக்க வேண்டும். அன்னையிடம் எத்தனை உரிமையோடு, நம் மனதிற்கிசைந்தபடி கேட்கிறோமோ, அதே உரிமையோடு, அன்னையின் கோட்பாடுகளையும் நாம் ஏற்க வேண்டும். ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

''என்னிஷ்டப்படி நான் நடந்தாலும், நீ அன்னை தானே! என்னிடமுள்ள வேண்டாதவைகளையகற்றி, எனக்குத் தர வேண்டியது உன்னுடைய பொறுப்புத்தானே...''

இந்த விதண்டாவாதத்துடன் அன்னையை வேண்டுபவர்கள் எத்தனை பேர்? 'வாதம்' என்பது வேறு. 'விதண்டாவாதம்' என்பது வேறு. வீண் விவாதங்களிலும், விதண்டாவாதமும்என்றும் வெற்றிப் பெற்றதாகச் சரித்திரமேயில்லை.

பண்டைய காலம் தொட்டு, பூக்களை, தெய்வங்களுக்கு அர்ப்பணித்து வருகிறோம். அது ஒரு கடமையைப்போல், பெரியவர்கள் சொன்னபடி செய்கிறோம். ஆனால், அதன் உள்ளர்த்தம் நமக்குத் தெரிந்ததில்லை.



அன்னை, ஒவ்வொரு பூவுக்கும், எத்தனை அழகாக, அததன் பலனைக் கூறியிருக்கிறார். இது நாமறியாத புதுமை அல்லவா? அதைப் படித்து நம் மனம் எத்தனை சந்தோஷிக்கிறது? உடனே, நம் நிலைக்கு ஏற்ப, அந்தந்த பூக்களைத் தேடிச் செல்கிறது. சந்தோஷத்தோடு பறித்து, அன்னைக்கு வைத்து, மகிழ்ச்சியோடு, 'இனி என்னுடைய இந்தச் சங்கடங்கள் நீங்கிவிடும்' என்கிற மன அமைதியோடு, திருப்தியோடு, இரண்டும் கலந்த பக்தியோடு, ''அப்பாடா'' என்கிற நிம்மதியடைகிறது. இந்த நிம்மதியை, பூக்களின் விளைவுகளை... நாம் அனுபவிக்கிறோம்... இது அற்புதமில்லையா?

எந்த ஒன்றையும், பக்தியோடும், உண்மையோடும், நம்மையே அந்த நேரத்திற்கு அர்ப்பணம் செய்து, வேண்டினால், ''பூலோகத்தில் சொர்க்கத்தை''யே பார்க்கலாமே.

அன்னையிடம் நம்மையே ஒப்படைத்த பிறகு, கிடைக்கும் ''அருள்'' எப்படியிருந்தாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் நமக்குள் நிச்சயமாக அரும்ப வேண்டும். அரும்பி மலர வேண்டும். அப்போதுதான் அன்னை நமக்குத் தரும் ''அன்றாட அற்புதங்கள்'' புரியவரும்.

சில வேளைகளில் நம்மையறியாமலேயே நாம் செய்த சில நன்மைகளுக்குக் கூட, அன்னை பலன் தருவார். அப்போதுகூட நாம் வியப்போம், ஆச்சரியப்படுவோமே தவிர, புரிந்து கொள்ளும் திறமையற்றவர்களாகவே உள்ளோம். ஏனெனில் நம் மனம் மண்டூகமானது. புரிந்து கொள்ளும் சக்தியற்றது. அந்த சக்தியை உற்பத்தி செய்துகொள்ளும் வழிகளுக்கான அலசல்களை செய்யும் திறனில்லாமலிருப்பதால், அந்தத் திறனையும் நாம் வளர்த்துக் கொள்ள, நமக்குப் புரிவதுபோல், ஒவ்வொன்றையும் விலாவரியாக, தெளிவாக எழுதியுள்ள புத்தகங்களை, நாம் படித்துத் தெளிவது அவசியம்.

மாமியிடம் கூறினாள் பார்வதி.

''மாமி, நான் இப்ப சமைக்கிறதுக்குப் போற வீட்டுக்குப் பக்கத்து வீட்டுலதான் என் குழந்தையை விற்கப் பார்த்தார் மாமி...''

''என்னடீ சொல்றே? வேண்டாம். வுட்டுடு. பயமாயிருக்குடி பாரு''

படபடத்துப் பேசின மாமியை சமாதானப் படுத்தினாள் பார்வதி.

''மாமி... இதுகூட, நம்ம அன்னையின் விளையாட்டுன்னு புரியலையா? மாமி, பக்கத்துப் பக்கத்து வீட்டுல எது நடந்தாலும், நமக்கும் தெரியுமில்லையா? அதனால எங்காத்துக்காரர் இனிமே அந்த வீட்டுக்குப் போகமாட்டார். அதுவுமில்லாம, இப்போ அவரை வெளியேத்தியாச்சு. இனிமே... அவர் என்ன நாடகம் போட்டாலும், அன்னை எனக்குக் காட்டிக் கொடுத்துடுவார்ங்கற நம்பிக்கை, பரிபூரணமாயிருக்கு. அவரால, எதையும் செய்ய முடியாது. முடியாதுங்கறதைவிட, செயல்படவே விடமாட்டார் அன்னை. அந்த தைர்யம் என் சரீரத்துக்குள்ளேயே ஓடிண்டிருக்கு. நான் எப்ப வெளியில போனாலும், போகாட்டாலும், தூங்கி எழுந்துக்கறதிலிருந்து, மறுபடி தூங்கறவரை எனக்குள்ளே அன்னைதான், ஓடிண்டிருக்கார் மாமி. அந்த ஓட்டத்தை என்னால, நான் என் மூச்சை நிறுத்தறவரை விட முடியாது. விடவும்மாட்டேன். இது சத்தியமான உண்மை மாமி. அதுவும், அன்னை, ஸ்ரீ அரவிந்தரைக் காட்டிக் கொடுத்த, உங்க வீட்டுக்கே, என்னையும் கூட்டிண்டு வந்துட்டாரே மாமி. இது எத்தனை பெரிய உதவி. மாமி, நான் அன்னையை மட்டுமில்லே, உங்களையும் விட்டு எங்கேயும் போகமாட்டேன்னா மாட்டேன்தான் மாமி''.

மாமியின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டவளின் கண்களில் நீர் தளும்பியது. ஆனால் முகத்தில் ஒரு மலர்ச்சி துளிர்த்திருந்தது.

மனம்என்பது, மனசுஎன்பது சாதாரணமானதேயில்லை. அதனுள் எத்தனையோ கோடிக்கணக்கான எண்ணங்களின் ஓட்டங்கள். நாம் நம் மனதை நம்மிடம், அதாவது மனதின் ஓட்டங்களை, நம் பிடிமானத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பிடியை எப்போது தளர்த்த வேண்டும்... எப்போது இறுக்கிப் பிடிக்க வேண்டும் என்னும் உபாயத்தைக் கண்டிப்பாய் கடைப்பிடிக்கத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். அப்போது தான், நம்மால் சரிவர இயங்க முடியும்.

''ம்... ஹும்... விதியை மதியால் வெல்லலாம்என்கிறார்களே? அது பொய்யா?''

விதிஎன்பது என்ன? நம்மால் அதை வெல்ல முடியவே முடியாதா? யோசித்துப் பாருங்கள்.



''விதியை மதியால் வெல்லலாம்'' என்கிற வசனமே, மிக மிக உண்மையானதுதான். அதை எப்படிப் பொய்யெனக் கூற முடியும்?

'விதி' என்னும் இரண்டெழுத்து, நம் மதி என்னும் இரண்டெழுத்துக்கு மிகவும் நெருங்கிய உறவுகொண்டது. அதனால்தான் நாம் அந்த மதியைக்கொண்டு விதியை வெல்ல முடிகிறது.

நல்லவர்களை விதி தோழனாக நின்று அரவணைக்கிறது. அதே விதி புத்தியுள்ளவர்களுக்கு, மிக சாதுர்யமான வழிகாட்டியாக அமைகிறது. அதே விதி மூடர்களுக்குத் தன்னை அவர்களைவிட உயர்ந்த ஸ்தானத்திலிருப்பதுபோல் பாவித்து அதிகாரம் செய்கிறது. கெட்டவர்களுக்கு, தன்னை எதிரியாகவே பாவித்து மோதுகிறது.

மதிக்கு, தன் அந்தந்த நிலைக்கு ஏற்ப, நாடகமாடும் நிலையை ஏற்படுத்திக் கொண்டு நடப்பது மனிதர்களாகிய நாம்தான். அதனால்தான் விதியை மதியால் வெல்லலாம் என்பதை, நமக்கேற்ப உபயோகிக்கிறோம்.

ஆனால், அன்னையிடம் சரணாகதியடைந்துவிட்டால், நமக்கு விதியும் சரி, மதியும் சரி ஒரு துச்சமானது. அந்த இரண்டைப் பற்றியும் கவலைப்படவே வேண்டாமே. நம்முடைய எண்ணங்களின் மேல் மதிப்பு வைக்காமல் அன்னையின் மேல் நம்பிக்கையோடு பூரணமாக தியானமோ, நினைப்பதோ வேண்டுதலோ செய்தோமானால், நமக்குத் தேவையானது எதுவோ, அதை நமக்கு நிச்சயமாகத் தந்துவிடுவார் அன்னை. அந்த நம்பிக்கை நம் சரீரம் பூராவும் ஊடுருவி, அன்னையையே நினைக்க வேண்டும்.

பார்வதியின் அந்த தைர்யம், நம்பிக்கை இரண்டுமே அவளுள் ததும்பி நின்றதால் எதற்கும் அவள், ''எனக்கு அன்னையின் துணை கூட வருகிறது, அன்னையிருக்க பயமேன்'' என்கிற தாரக மந்திரத்தை, தன்னுள்ளேயே பொதிந்து எப்போதும் பத்திரமாக வைத்திருந்ததால், அன்னை அவளைக் கைவிடுவாரா என்ன?

❀❀❀

நாள், மாதத்தைத் தொட்டு, வருஷத்தை முழுவதுமாக எட்டிப் பிடித்தே விட்டது.

பெரியவனை ஸ்கூலில் சேர்த்தாயிற்று. சின்னவனை மாமி பார்த்துக் கொண்டார்.

சமையல் ஒரு வேளையிலேயே இரண்டு நேரத்திற்கும் சமைத்து வைத்துவிடுவாள். டிபனுக்கு அரைக்க வேண்டியதையும் அரைத்து, சப்பாத்திக்கு மாவு பிசைந்து, சப்பாத்தியும் செய்து வைத்துவிட்டு, வந்துவிடுவாள். ஒரு டம்ளர் காபியைக் கூட எதிர்பார்ப்பவளில்லை. அவள் சரீரம் முழுவதும் 'அன்னையே சரணம்' ஓடிக்கொண்டிருந்த-தால், களைப்பு என்பதே அற்றுப்போனது.

வீட்டிற்கு வந்தும் மாமியின் உதவியுடன் பட்சணம் பாடி செய்து கவரில் போட்டு, கடைகளுக்குத் தருவாள். சுத்தமும், ருசியும் அதிகமாயிருந்ததால், சில கடைகளில் பதிவாக அவளிடமே வாங்கினர்.

மனது தெம்பு கூடியபோது, உடலிலும் தெம்பு அதிகமானது. அதனால் உழைப்பும் அதிகமாக, வியாபாரமும் பெருக, வரும்படியும் அதிகரித்தது.

அன்று கொஞ்சம் அசதியுடன் படுத்திருந்த பார்வதியைப் பார்க்கப் பார்க்க மனசு விண்டு விரிந்தது மாமிக்கு. ஆனால் பார்வதியிடம் அசதியிருந்ததே தவிர, மனது கொஞ்சம் கூட துவளவில்லை. அரை மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டவள், துடிப்புடன் எழுந்து, ஏழு சுத்து முறுக்கை, சுற்றத் துவங்கினாள். பார்வதி மறுத்தும் மாமி முறுக்கை எண்ணையில் போட்டு எடுத்தாள்.

மாமி... இப்ப ஆர்டர் நிறைய வருது. இது நிஜம்மா அன்னையோட கருணையாலதான் மாமி. அந்தந்த டைமுக்குத் தரணும்னா, நான் ஒருத்தியே செய்ய முடியலே... ஆளைப் போட்டுக்கலாம்னா... பயமாயிருக்கு. நல்லவாளா கிடைக்கணுமே. அன்னையைத்தான் வேண்டிண்டிருக்கேன். நிச்சயம் வழி பொறக்கும் மாமி.

''இதோ பாரு, வழி பொறந்துடுத்துன்னே வச்சுக்கோடி. என்ன அதிசயம்டி பாரு. அதிசயமேதாண்டி. அதிசயமே அன்னைதாண்டி. என்ன பிரமிச்சுப் போயிருக்கே. காலம்பற நீ சமைக்கப் போயிருந்தபோது, உன் வயசு பொண்ணு வந்தாடி. அவளுக்கு யாருமில்லையாம், ஏதாவது வேலை கிடைக்குமான்னு கேட்டாள். ஒரு



நிமிஷம் உனக்கு ஒத்தாசையா வச்சுக்கலாமேன்னு தோணித்து. திரும்ப, நீ வந்தபிறகு கேட்டுண்டு, ரெண்டு பேருமா தீர்மானிக்கலாம்னு...''

கதவைத் தட்டும் சத்தம் கேட்க, பார்வதி எழுந்து கதவைத் திறந்தாள். பின்னாடியே வந்த மாமியும், வரவேற்றாள்.

''பாரு... இந்தப் பொண்ணுதாண்டி வந்தது. நீயே பேசிக்கோம்மா...''

''அக்கா... எனக்கு ஆதரவுன்னு யாருமில்லே. ஏழ்மைக் குடும்பம். பெத்தவாளுமில்லை, கட்டிண்டவனும் விட்டாச்சு. அப்பப்ப கிடைக்கிற வேலையை செஞ்சுண்டிருந்தேன். கடையில, ஏதாவது வேலை கிடைக்குமா, கூட்டிப் பெருக்கி செய்யலாமேன்னுதான், அந்த பெரிய கடைக்குப் போனப்ப, அவங்கதான் சொன்னாம்மா. உங்களுக்கு உதவிக்கு ஆள் வேணும்னு கேட்டிருந்தீங்கன்னு சொல்லி விலாசம் குடுத்தா... அதான்...'' மேலே பேச தயங்கினாள்.

பாவமாகயிருந்தாலும், கொஞ்சம் பயமும் மனசுக்குள்ளிருந்தது பார்வதிக்கு. சட்டென அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் படத்தை ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் பார்த்து, மனமார வேண்டினாள். தெம்புடன் பேசினாள்.

''இதோ பாரும்மா... நீ யாரு... என்னன்னு எனக்குத் தெரியாது. அந்த கடைக்காரர் சொன்னதால சரின்னு சொல்லலாம்னு இருக்கிறேன். ஆனா, உனக்கு இருக்கிறதுக்கு இடம் இருக்கோல்-லியோ? இத்தனை நாள் எங்கேயிருந்தே? யார் வீட்டுல இருந்தே? என்ன வேலை செஞ்சே? இதெல்லாம் எனக்குத் தெரியணுமே...''

மாமி அசந்தே போனாள். என்ன தெளிவாகப் பேசுகிறாள் பார்வதி. இந்த திருத்தமான, சாமர்த்தியமான பேச்சு... ஒண்ணுமே தெரியாத அவளுக்கு, அன்னை கொடுத்த வரம்தானே... ''அன்னையே உன்னுடைய கருணையும், ஆதரவும் என்னென்னிக்கும் கிடைக்கணும்மா. பாருவோட குழந்தைகளும் உன்னருளால் நல்லவிதமா வளரணும்மா... அம்மா...''

''அக்கா, அக்கா... நான்... நான்...'' மேலே பேச்சு வராமல் விம்மினாள். பார்வதி மனது தவித்தாலும், பேசவில்லை.

‘‘அக்கா, நான் இப்ப அனாதை மாதிரிதான். ஒரு குடிசையில தான் இருக்கேன். தட்டு முட்டு சாமான்னு ஒரு சின்ன கூடையிலதானிருக்கு. உறவுன்னு யாருமில்லே. அனாதைதான். நல்ல வேளை... கட்டிண்டவனால எனக்கு வயத்துல புழு, பூச்சி ஒண்ணும் குடியேறல. அதனால நான் ஒண்டிக்கட்டைதான் என்னைத் தேடிண்டு யாரும் வரமாட்டா. நானும் யாரையும் தேடிண்டு போகமாட்டேன் மாமி. அக்கா... நான் சொல்றது அத்தனையும், அத்தனையும்...’’

மேலே பேச்சு வராமல் அங்குமிங்கும் கண்களை சுழற்றினாள்.

‘‘என்னம்மா... என்ன சுத்துமுத்தும் பார்க்கரே... என்ன தேடறே. புரியலையே...’’

‘‘இல்லே... சாமி மேலே சத்தியம் பண்ணணும். நான் சொல்றதெல்லாம் உண்மைன்னு சொல்லத்தான் தேடினேன். ஆனா, இந்தாத்துல ஒரு சாமி படம்கூட இல்லையே... ஏன்? எனக்குப் புரியலையே...’’

‘‘என்ன சொன்னே... என்ன சொன்னே... எங்காத்துல சாமி படமில்லையா? யாரு சொன்னது? உயிரோட்டமான, ஜீவனோட... நம்மையே பார்க்கிற இந்த ‘அன்னை’யோட நாலு அவதாரத்தைப் பத்தி உனக்குத் தெரியாதே. மனுஷாளுக்கு, மனுஷா மாதிரியேயிருக்கிற... இந்த உலகம் பூராவும்... அன்னை, மதர், அம்மான்னு, அவாவா பாஷையில எப்டி கூப்பிட்டாலும் சரி, சத்தியமான, உண்மையான வேண்டுதலுக்கு, நம்மை அரவணைத்து, ஆதரவு தந்து, இதமா தடவிக் கொடுக்கிறாரே பெத்த தாய்க்கும் மேலா...

அது மட்டுமா... நாம செய்யிற எந்த தவறையும் நம்மையே உணரச் செய்து, அதுலேருந்து நம்மை நல்ல பாதையில செல்ல வைக்கிறாரே... இன்னும், இன்னும்... ம்... இவாதாம்மா நாங்க ஆராதிக்கிற அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும். புரிஞ்சுக்கோ.

முக்கியமா... நாம தவறு செஞ்சாலும், செய்யவிடாம தடுத்துடுவார். எப்படியாவது நம்மையே உணரச் செய்வார். சரி, சரி, இப்போதைக்கு இது போதும். பார்வதி, உன்னோட அபிப்ராயம் எப்படியோ, அப்படியே நடந்துக்கோம்மா... புரிஞ்சுதா?...’’ மாறி, மாறி, மாமியும் பார்வதியும் கூறியதுடன், புரிந்து கொண்ட பார்வதி, அந்தப் பெண்ணையே பார்த்தவள் அன்னையை மனமார வேண்டினாள்.



‘‘அன்னையே... நீ இருக்கும் இடத்தில், நிச்சயமாய் நல்லவரைத் தான் அனுப்புவாய், நல்லதையேதான் செய்வாய் என்கிற நம்பிக்கை என்னுள் பூரணமாக இருக்கிறது. இதுவும் உன் விருப்பப்படிதான் நடக்கிறது. அதனால், யாருமில்லாத இந்தப் பெண்ணை, உன்னை என் மனதிலிறுத்தி, வேண்டியே இந்த உன் இருப்பிடத்தில் அனுமதிக்கிறேன். அருள்வாய் அம்மா...’’

கண்களை மூடி பிரார்த்தித்தவள், அந்தப் பெண்ணை ஆதரவோடு கரங்களைப் பிடித்து அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் முன்பு நிறுத்தினாள்.

‘‘இதோ பாரும்மா... உம் பேரு...’’

‘‘கீதாம்மா... அக்கா... நீங்களும் பேர் சொல்லியே கூப்பிடுங்கக்கா’’.

‘‘சரிம்மா கீதா... நீயும்... இனிமே எந்த கஷ்டமும் இல்லாமயிருக்க அன்னையை வேண்டிக்கோ... உனக்கு விருப்பமில்லேன்னா... கட்டாயமில்லே கீதா...’’

‘‘அக்கா... எப்ப உங்காத்துல எனக்கும் ஒரு இடம் தந்துருக்கேளோ, அப்பவே நானும் இந்த வீட்டு மனுஷியாகவே மாறிட்டேங்கா. நீங்க என்ன கொடுக்கிறேளோ, அதைத்தான் சாப்பிடப் போறேன். நீங்க என்ன வேலை தரேளோ, அதைத்தான் செய்யப்போறேன். நீங்க எந்தத் தெய்வத்தை ஆராதிக்கிறேளோ, அதே தெய்வத்தைத்தான் நானும் ஆராதிப்பேன். இதுல எந்த மாற்றமுமில்லேக்கா. மாமி, நான் இந்த வார்த்தைகளை உண்மையா, நீங்க வணங்கற, இந்த, அன்னை, ஸ்ரீ அரவிந்தர் எதிரே நின்னு சத்தியமா சொல்றேன் மாமி. என்னை நம்புங்கோ மாமி’’.

கண்கள் தளும்ப சொல்லும் கீதாவை இருவருமே அணைத்துக் கொண்டனர்.

❀❀❀

மூவரின் கூட்டணியில், அன்னையும், ஸ்ரீ அரவிந்தர் மட்டுமே தெய்வமாகயிருக்க, வியாபாரம் மட்டுமல்லாமல், குழந்தைகளும் வளர,

மூவரும் நல்ல ஆரோக்கியத்தோடு, சந்தோஷத்தோடு, உற்சாகத்தோடு வேலை செய்தனர். இத்தனையிலும், காலையில் சமைக்க ஒத்துக் கொண்ட வேலையை பார்வதி விடவேயில்லை.

''பார்வதி... காலையில சமைக்கறதை விட்டுடேம்மா. இப்ப நாம மூணு பேருமா, நிறைய 'ஆர்டர்'களை ஏத்துண்டு செய்யறோம். அதுவும், உனக்குக் கொஞ்சம் கூட ரெஸ்டேயில்லே. அதனால அந்தாத்து சமையலை விட்டுடேம்மா... சரியா...''

கண்களை ஒரு வினாடிக்கும் குறைவாக மூடித் திறந்தாள். கண்கள் பனித்திருந்தது.

''மாமி... நீங்க சொல்றது ரொம்ப சரிதான். ஆனா... என்னால அந்த வீட்டை விடமுடியாது மாமி. ஏந்தெரியுமா? அந்த வீட்டு மனுஷாளும் நல்லவா மட்டுமில்லே, நான் போய் வேலைன்னு நீங்க சொன்னதை வச்சுண்டு கேட்டபோது, தயக்கமேயில்லாம வேலை தந்தா. ஒரு நாள் கூட கடுஞ்சொல் சொன்னதில்லே. என்ன சொன்னாலும் கேட்காம கூடமாட ஒரு சின்ன ஒத்தாசையாவது செய்வா. அதெல்லாமே விடுங்கோ. எனக்கு என்ன படிப்பிருக்கு? வேறே வேலை செய்ய? அந்த சமயத்துல எனக்கும், என் குழந்தைகளுக்கும் பசியாற வழி செய்தது அந்த வேலைதானே. அவாளை, அந்த வயசானவாளை நான் தடுமாற விடமாட்டேன் மாமி. இங்கேயிருந்து அனுப்பலாமே சாப்பாட்டைன்னு சொல்லலாம். ம்... ஹும். கூடாது. வயசானவாளுக்கு, ஒவ்வொரு நாளும் அவாளைக் கேட்டு, அவா ருசிக்கேற்ப சமைச்சுத் தரதே ஒரு சந்தோஷந்தானே... அதுவும் எனக்கு மட்டுமில்லே... அவாளுக்கும்தான். அதை அவா இழக்கக் கூடாது. நானும் விடவே மாட்டேன். அவாளே போதும்மா நீ வேலை செஞ்சதுன்னு சொல்லட்டும். அப்ப விடறேன். அது வரைக்கும் காலம்பற போய், அவாளுக்கு சமைச்சு வச்சுட்டு, டிபனுக்கும் ஏற்பாடு பண்ணிட்டுத் தான் வருவேன். தப்பா எடுத்துக்காதேங்கோ மாமி...''

''பார்வதி... என்னமா... மனுஷாளோட மனசைப் புரிஞ்சுக்கற சக்தியை அன்னை உனக்குத் தந்துருக்கா. நான் ஒரு மூடத்தனமானவடி. அதான் அப்படி பேசிட்டேன். தப்புதான். நீ ரொம்பவே சரியாச் சொன்னே. வயசானவா மனசுக்கும், வாய்க்கும், இதமா செய்யிறதும், பேசறதும்தாண்டி சரி. கீதா, பார்த்தியா...



பார்வதியோட மனசைப் புரிஞ்சுண்டியா... நீயும் எங்களோட நல்லதனமா நடந்துக்கோ... அப்ப நிரந்தரமா, இங்கேயே இருந்துக்கலாம்... சரியா... கீதா...''

சட்டெனத் திரும்பிய கீதா... அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படத்தின் முன் நின்றாள். கண்களை மூடி பிரார்த்தித்தாள். வீழ்ந்து வணங்கியவள் கூப்பிய கரங்களுடன், ''மாமி, அக்கா... நான் எப்பவுமே உங்க ரெண்டு பேரோடதானிருப்பேன். எனக்கு இப்டியொரு இடம், கூடப்பொறந்தவாபோல, உங்க ரெண்டு பேரோடவும், குழந்தைகளோடவும், இந்தத் தெய்வங்களோடவும் இருக்கக் குடுத்து வச்சிருக்குன்னுதான் சொல்லுவேன். என்னை இந்த மாதிரி ஒரு இடத்துல சேர்த்ததுகூட நீங்க வணங்கற அன்னையோடதா- தானிருக்கும். இனிமே என்னோட தெய்வமும் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்தான். அதுல மாத்தமேயில்லேக்கா...''

''இதோ பாரு... இனிமே நாமளே ஒருத்தருக்கொருத்தர் பாராட்டிக்கறதை விட்டுட்டு, நம்ம வேலையை எப்டியெப்டி செய்யணும்னு ஆலோசிச்சு செய்யலாம். சரியா கீதா...''

கீதா ஆமோதிக்க, அவர்களின் வேலைகளை ஆரம்பித்து, வருடம் ஒன்று ஓடியே போனது.

❀❀❀

இதில், இவர்களுடைய கைப்பக்குவம் பிடித்துப் போக, எல்லோரும் இவர்களையே ஒருவருக்கொருவர் சொல்லி ஆர்டர் வர, அவர்களால் முடிந்த அளவுதான் ஒத்துக் கொண்டனர்.

''அக்கா, வந்ததை விடவேண்டாம். நான் செய்யறேனேக்கா'' என்று கீதா கூறினாலும், மாமியும், பார்வதியும் மறுத்துவிடுவார்கள்.

''வேண்டாம் கீதா. நம்ம சரீரமும் ஒரு மிஷின் போலதான். சக்திக்கு மீறி வேலை செஞ்சோம்னா, மிஷின் ரிப்பேராகிறதுபோல, நம்ம உடம்பும் நமக்கு ஒத்துழைக்காது. அப்புறமா டாக்டருக்குத்தான் தர வேண்டியிருக்கும். எதையும் நாம நிதானத்தோடவே செய்யலாம் கீதா. மாமி என்னைவிட வயசானவா. நான் உன்னைவிடப் பெரியவ. நீதான் வயசுல எங்களைவிட சின்னவ. அதனால நீ துடிப்போடயிருக்கே. அந்தத் துடிப்பு எப்பவும் இருக்கணும்னா, நம்ம

வேலையில எப்பவுமே நிதானம்தான் இருக்கணும் கீதா. நம்ம மூணு பேரோட பேர்லயும், பேங்க்குல கொஞ்சம், கொஞ்சமா பணம் போட்டுண்டு வரேன்...''

''என்னடி சொல்றே... என்ன சொல்றே நீ... நான் உன்னோட அம்மா மாதிரிடி. எம் பேர்ல ஏன் போடறே? எனக்குப் பிடிக்கலே. அப்ப நீ என்னை, வேத்து ஆளாத்தானே நினைக்கறே... ம்...'' மேலே பேச முடியாமல் கண்கள் தளும்ப, பேசும் மாமியை, சட்டென எழுந்து அணைத்துக் கொண்ட பார்வதியின் கண்களிலும் நீர்.

''மாமி... தப்பா நினைச்சுட்டேளே... எல்லாமே உங்க பேர்ல தான் போட்டிருக்கணும். ஆனா... எதுக்குப் பிரிச்சுப் போட்டேன். எப்ப... எப்டி... என்ன நடக்கும்னு தெரியாது. திடீர்னு எங்காத்துக்காரரோ... இல்லே கீதாவோட வீட்டுக்காரரோ வந்து, தடாலடி பண்ணினா... ம்... சொல்லுங்கோ... அப்ப என்ன பண்றது? எங்க பேர்ல பணத்தைப் போட்டா எல்லாமே கொள்ளை போயிடுமே... மாமி... நான் உங்க வீட்டுக்கு வாடகைத் தரேன்னு என்னிக்காவது சொல்லியிருக்கேனா? இல்லையே... ஆனா... வயசான நீங்களும்தானே கூடமாட செய்யிறேள். இதையும் அன்னைகிட்டே ரெண்டு நாள் இடைவிடாத பிரார்த்தனை பண்ணித்தான் இந்த முடிவுக்கு வந்தேன் மாமி... இது தப்புன்னு சொல்லுங்கோ உங்க சொல்படி நடக்கிறேன்... சரியா...''

கீதாவுக்கு, மனசு பொங்கிப்போய், நின்ற இடத்திலிருந்து ஓடி வந்து, பார்வதியைத் தன்னோடு இறுக அணைத்தபடி, கேவிக் கேவி அழலானாள். மாமியோ, கண்கள் மல்க... பேச்சு வாராமல் தவித்தார். ஆனால் கீதா... ''முடியலே... என்னால முடியலே... மனசுங்கறது இப்டிகூட பூவா மலர்ந்திருக்குமா... அந்த மனசுலயிருக்கிற பூ... வாடவே வாடாதா? கசங்கவே கசங்காதா? எப்போதுமே அப்ப பூத்த பூ போலவே புதுசா, வாசனைங்கற ரம்யமான மனசையேதான் உள்ளே வைத்திருக்குமா? இதுவரைக்கும் நான் இப்பேர்ப்பட்ட மனசோட இருக்கிறவாளைப் பார்த்ததேயில்லைங்கறது உண்மைன்னா, உண்மைதான். ஆனா... இங்கே நிஜத்தைத்தான் பார்க்கிறேனே ஒழிய... எந்த ஒரு... ஒரு... சொல்ல வார்த்தைகளே வரலையேக்கா... தெரியவுமில்லையே... நான் இங்கேருந்து போகவேமாட்டேன். உங்களோடவேயிருந்து, அன்னையோட பாதங்களையே மனசுல கெட்டியாப் பிடிச்சுண்டிருக்கப்



போறேன். எனக்கு வேறே ஒண்ணும் சொல்லத் தெரியலே. சத்தியமா தெரியலேக்கா...''

அழும் கீதாவையும், மாமியையும் இறுக சேர்த்துப் பிடித்தபடி, பொங்கிப் போனாள் பார்வதி. பொழிந்தன அவள் விழிகளும்.

''இது போதும்... இது போதும் அன்னையே... எனக்கு இது போதும். இந்த அன்பான உறவு எனக்கு எப்போதும் உடனிருந்தால் போதும்... அம்மா... உன்னையே சரணாகதின்னு வந்ததுக்கு, எனக்கு மட்டுமல்ல... இன்னொரு அபலைக்கும் வழிகாட்டி, எங்களோட பிணைச்சுவிட்டதுக்கு நன்றிம்மா... நன்றி... உன் பாதங்களை என்னோட மனசுக்குள்ளேயே பிரதிஷ்டை பண்ணிட்டேம்மா... அம்மா... அன்னையே என் இதயத்துடிப்பு உன் பாதங்களைச் சுத்தித்தாம்மா செயல்படும். அம்மா... உன் சரணம்தான் எனக்கு பாதுகாப்பு. அதை நழுவவே விடமாட்டேன். விடமாட்டேன்...'' நாட்களின் நழுவலில், மாதங்கள் உருண்டு, வருடங்கள் சுழல ஆரம்பித்தன.

பார்வதியின் பெரிய மகன் பத்தாவதும், சின்னவன் எட்டாவதும் படிக்க ஆரம்பித்தாயிற்று. இருவரும் நன்றாகவே படித்தார்கள். ஒருவருக்கொருவர் உதவியபடி, சண்டை என்பதில்லாமல், காலை, மாலை இரு வேளைகளிலும் அன்னை ஸ்ரீ அரவிந்தரை வணங்கி தியானம் செய்தபின்பே, அவர்களின் படிப்பு, மற்ற எல்லாவற்றையும் கவனித்தனர்.

மாமிக்கு வயதானாலும் தெம்புடனேயே பார்வதியையும், கீதாவையும் அன்போடு பேசியும், கூடமாட வேலை செய்தும், குழந்தைகளோடு சந்தோஷமாகவுமிருக்க, வீடு எந்தவிதமான கோபதாபங்களில்லாமல், அமைதியாக, சந்தோஷமாக, மகிழ்ச்சியாக-விருந்தது.

நினைவு அறிந்த நாளிலிருந்து, அன்னை, ஸ்ரீ அரவிந்தரையும், பூக்களையும், தியானத்தையும் கண்கூடாகப் பார்த்து வளர்ந்திருந்த பெரியவன் சீனுவும், சின்னவன் ராமுவும், தினமும் அந்த தியானத்தைத் தங்கள் வயதிற்கேற்ப, ஐந்து நிமிடங்களில் ஆரம்பித்து, இப்போது அரை மணி நேரம் அமர்வது அவர்களின் வழக்கமானது. அதுவும் காலையிலேயே எழுந்து, குளித்து, தியானம் செய்தபின்பே, எதானாலும்

பாலோ, காபியோ குடிப்பது. அதன்பின்தான் மற்றவை. படிப்பிலும் ஓரளவுக்கு இரண்டு பேரும் நன்றாகவே படித்தனர். தம்பிக்குத் தெரியாததை அண்ணன் பொறுமையாகவே சொல்லித் தந்தான். தனக்குத் தெரியாததை, பார்வதி சமைக்கும் வீட்டில், அந்த தாத்தா அவனுக்கு அன்புடன் புரியும்படி சொல்லித் தந்ததில் இருவருமே படிப்பின் முக்கியமறிந்து படித்தனர்.

அன்று பார்வதி சமைத்துவிட்டு, வீட்டை நோக்கி நடந்தபோது... யாரோ பின் தொடர்வது போலிருந்தது. அந்த உணர்வு அவளுள் ஏற்பட்டதும், அன்னையின் சரணத்தை தன்னுள் சுழலவிட்டாள். நிதானமாகவே நடந்தாள். அன்னையின் சரணம் மனதில் சுழன்று கொண்டிருக்க, அவள் அமைதியாகவே, சாதாரணமாகவே நடந்தாள் சலனமில்லாமல். வீட்டிற்குள்ளும் நுழைந்தாயிற்று. கதவையும் மூடி தாழ்ப்பாளும் பூட்டும் போட்டாயிற்று. யாரென்று திரும்பியும் பார்க்காவிட்டாலும், உணர்வு கூறிவிட்டது, அவள் கணவன்தானென்று. நேராக அன்னையின் முன்பாக, கண்ணிமைகளை மூடி அமர்ந்தவள்தான்... எத்தனை நேரம்... எத்தனை மணி என்பதுகூட அவளால் அறியயியலாமல், அன்னையுடனேயே ஐக்கியமாயிருந்தாள்.

மாமியும், கீதாவும் மட்டுமல்ல, சீனுவும், ராமுவும் துளிக்கூட சத்தமில்லாமல் நடந்து கொண்டனர். எதனால் 'அம்மா' திடீரென்று 'அன்னை'யின் முன் தியானத்தில் அமர்ந்துவிட்டாள்எனத் தெரியாவிட்டாலும், அவர்களும் அன்னையை, ''அன்னையே... என் அம்மாவிற்கு எந்த கஷ்டமும் வரக்கூடாது. எதுவானாலும் தடுக்கும் சக்தி உங்களுக்கிருக்கிறது. என் அம்மா இனிமேலும் எந்தவிதமான சஞ்சலங்களோ, யோசனைகளோயில்லாமல் நன்றாகயிருக்க வேண்டும். அன்னையே... உங்களின் பாதங்களையே பற்றிக்கொண்டு நாங்களிருவரும் வேண்டுகிறோம் அன்னையே... சரணம்... அன்னையே சரணம்...'' எத்தனை முறைஎன்பதை நினைத்தும் பார்க்காமல் இடைவிடாது சொன்னார்கள். முதலில் சின்னவன் வணங்கி எழுந்திருக்க, மேலும் சிறிது நேரத்திற்குப் பிறகு பெரியவனும் அன்னையின் பாதங்களை வணங்கி எழுந்தான். ஆனாலும் அவன் விழிகள் அன்னையை விட்டு விலகவில்லை. தீர்க்கமாகப் பார்த்தபடி நின்றிருந்தவனை, யாரோ, கதவைத் தட்டும் சத்தம் கேட்டதும்,



சட்டென கலைந்து, ராமுவைத் தடுத்து அவன் விரைந்தான்.

வந்தவரின் முகம் சிரித்தது. ஆனால் அவர் சிரித்தபோது திறந்த வாயிலிருந்து வந்த நாற்றம் சீனுவின் முகத்தை சுளிக்க வைக்கப் புரிந்தே போனது.

''யார் நீங்க? என்ன வேணும்? ம் சொல்லுங்க?... யார் நீங்க?'' கேள்விக்கணைகள் ராமநாதனை துளைத்தது. ஆனால் அவனால், கேட்கும் பையன் ''என் மகன்களில் பெரியவனா? சிறியவனா?'' புரியாமல், தள்ளாடியபடியே பார்த்தான். சட்டென உள்ளே போன சீனு, கீதாவைக் கூப்பிட்டு, மேலோட்டமாக, இது தன் அப்பாவாகத்தா-னிருக்க வேண்டும். அதனால் எப்படிப் பேச வேண்டுமோ அப்படி பேசி அனுப்பிவிடும்படி கூறினான். கீதாவும் முதலில் தன் மனதில் அன்னையை நினைத்து, தன் அதரத்திலிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தைகளும், உன்னுடையதாகத்தானிருக்க வேண்டும் அம்மா... எந்த அசம்பாவிதமும் நடக்காமல் நீயே என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்து விடு. எல்லாமே உன் விருப்பப்படித்தான் நடக்க வேண்டுகிறேன்'' என பிரார்த்தித்தவள், தைர்யமாகக் கதவருகில் நின்றாள்.

''யார் நீங்க? என்ன வேணும்? ம்... சொல்லுங்க...''

''என்ன... நீ யாரு மொதல்ல சொல்லு. பாருவைக் கூப்பிடு... அப்ப... தெரியும்... போ... அதுக்கும் முன்னாலே கதவத் தொற...''

கதவைத் தட்ட ஆரம்பித்தான். அதற்கும் மேல் பொறுக்க முடியாமல் மாமி வந்து நின்றார்.

''இதோ பாரு ராமனாதா. இங்கே வந்து நின்று கத்தாதே... பார்வதி, தியானத்துலயிருக்கா. அதனால வரமாட்டா. உன் வழியப் பார்த்துண்டு போ... அவ்வளவுதான் நல்லபடியா சொல்லுவேன்...''

''மாமி... எம் பிள்ளைகளைக் கூப்பிடுங்கோ. அவாளைப் பார்த்து, நான் என்னோடு கூட்டிண்டு போகப் போரேன். அப்புறமா இந்தப் பக்கமே வரமாட்டேன்... அனுப்புங்கோ பிள்ளைகளை... ம்...''

குளறியபடி பேசும் அவனைப் பார்த்து ஆக்ரோஷமாக வந்த ராமுவை அடக்கி சீனு, முன் நின்றான்.

''எங்க ரெண்டு பேருக்கும் இதுவரை அப்பாவைத் தெரியாது.

எங்க ரெண்டு பேருக்கும் அம்மா, மாமி ரெண்டு பேரைத்தான் தெரியும். அதனால... வீணா கத்தி, கலாட்டா பண்றதை வுட்டுட்டு, உங்க வழியில போங்கோ... அவ்வளவுதான்...''

''அதெப்டிடா சொல்லுவே... அப்பாவைத் தெரியாதுன்னு. இதோ உசுரோட நிக்கிறேனே...'' ஆத்திரத்தோடு குழறிப் பேச... ராமுவுக்கு ஆத்திரம் வந்தது.

''ஆமா... நான் சொல்லுவேந்தான். நான் பொறந்தன்னிலேருந்து நினைவு தெரிஞ்ச நாளுல, என்னோட அப்பாவை எனக்குத் தெரியாது. அப்பா... அப்பான்னு இதுவரை யாரையுமே நாங்க கூப்பிட்டதில்லே. கூப்பிட, அந்த அப்பாங்கற மனுஷன் எங்களோடயில்லே. அதுக்கப்புறம், யாரோ ஒருத்தர் வந்து, கதவைத் தட்டி, நான்தான் உங்கப்பான்னு சொன்னா, அதை ஏத்துண்டு உள்ளேவிட நாங்க என்ன படிக்காதவாளா? எங்கம்மா... எங்களைப் படிக்க வச்சுண்டிருக்கா. அதுக்காக, எங்கம்மாமட்டுமில்லே, மாமியும், கீதா சித்தியும் எங்களுக்காக பாடுபடறா. அவாதான் எங்களுக்கு சொந்தமே தவிர வேறே எந்த சொந்தமும் எங்களுக்குக் கிடையாது. இனிமே புதுசா எந்த சொந்தமும் வேண்டவும் வேண்டாம். அதனால வர தொந்திரவும் வேண்டாம். எங்களுக்குத் துணையா அன்னையும், ஸ்ரீ அரவிந்தரு-மிருக்கா. அவா ரெண்டு பேருந்தான் எங்களுக்குத் தெய்வம். அவாதான் எங்களை பாதுகாக்கறா. நீங்க என்ன அழிச்சாட்டியம் பண்ணி, ஊரைக் கூட்டினாலும், உங்களை நாங்க ஏத்துக்கவும் முடியாது. வீட்டுக்குள்ளவும் விட முடியாது. நீங்க போகலாம்... ம் வாண்ணா... நாம உள்ளே போயிடலாம். அவர் பாட்டுக்குக் கத்திண்டிருக்கட்டும்...'' ராமு, சீனுவை, தரதரவென இழுத்தபடி உள்ளே சென்றுவிட்டான்.

வாசல் கதவு எப்போதும் பூட்டி வைத்திருப்பது வழக்கமானது. மூவரும் பெண்களானதால் அதைக் கடைப்பிடித்து வந்தார்கள். அது இப்போது அவர்களுக்கு, ராமனாதனிடமிருந்து பாதுகாப்பைத் தந்தது.

கத்தி, கதவைத் தட்டிவிட்டு, முடியாமல் தள்ளாடியபடியே சென்றேவிட்டான் ராமனாதன். அக்கம், பக்கம் கூட யாரும் அவனுக்கு ஆதரவாக வரவில்லை என்பதுதான் உண்மையாகிப் போனது.

❀❀❀



தியானம் கலைந்து எழுந்தவளின் மனம், அலைகளற்ற நடுக்கடல் போல் அமைதியாகயிருந்தது. வீழ்ந்து வணங்கிய பின், அருகே நின்றிருக்கும் பிள்ளைகளை அணைத்துக் கொண்டாள்.

சமையலறையில் இருபது பேருக்கான சாப்பாடும், முப்பது பேருக்கான இட்லி, வடை, சம்பார், சட்னியும், தயாராகி, தூக்கில் போட்டு வைத்திருந்ததை, அதன் மேலிருக்கும் சீட்டில் விலாசமும் எழுதப்பட்டிருக்க, சைக்கிளில் சீனுவும், ராமுவும் எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

நடந்ததைப் பற்றி எவருமே பேசவில்லை. ஒரு காற்று பெரியதாக அடித்து, ஓய்ந்தது போலிருந்தது. அவ்வளவுதான். மற்றபடி எதுவும் பேசவில்லை. மறந்துதான் போனார்கள்.

பார்வதியும் மளமளவென்று எல்லாவற்றையும், பேக் செய்து, கீதாவிடம் தர, அவள் ஒரு ஸ்கூட்டரில் வைத்து, அதற்காகவே செய்திருந்த கேரியரில் வைத்துக் கட்டி எடுத்துப் போனாள். இன்னும் இரண்டு பேர், அவர்களே காரில் வந்து எடுத்துப் போனார்கள். எல்லாமே ஏழு மணிக்குள் முடிந்தது.

நடந்ததைப் பற்றி யாரும், எதுவுமே பேசவில்லை. அதைப் பற்றிய எண்ணம்கூட அவர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

நம்மால் முடியுமா? கேட்பது தெரிகிறது. அன்னையைப் பரிபூரணமாக நம்புபவர்களுக்கு, பேரிழப்புக்கூட, அன்னையிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு, அதைப் பற்றிய எண்ண ஓட்டங்களை, தங்களிடமிருந்து ஓட வைத்து விடுவதால், அன்னையின் அருள், அவர்களுக்கு முழுமையாகக் கிடைப்பது கண்கூடு.

நிதர்சனம் என்பதில் நடப்பது எத்தனையோ. அந்த நிதர்சனத்தில் நம் பக்திக்கும், மனதின் உறுதிக்கும் ஏற்ப 'அன்னை' கண்டிப்பாக, நிச்சயமாக நம்மோடு துணை வருவார். அதில் துளிக்கூட சந்தேகமே கிடையாது. இது அவரவர் வாழ்வில் நடக்கும், எத்தனையோ சந்தர்ப்பங்களின் மூலம் அறிய முடியும். ஆனால் அந்த சந்தர்ப்பங்களில், அன்னையை மறந்து, நம் மனதை இறுக்கிப் பிடித்திருக்கும் வேண்டாதவைகளை இன்னும் இறுக்கி நம்மோடே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் நம்முடைய மன இயல்பு.

குளத்தில் குளிக்கப் போகிறோம். அப்போது அந்தக் குளத்திலிருக்கும் பாசிகளை, நம் கரங்களால், தள்ளி விட்டு, பிறகுதானே அந்த நீரில் முங்குகிறோம். அது போலத்தானே நம் மனம் என்னும் குளத்திலுள்ள, வேண்டாதவைகளைப் பாசிகளாக நினைத்து அகற்ற வேண்டியது, நம் பொறுப்பேதான். நாம், நம் பொறுப்புக்களை, அவ்வப்போதிருக்கும் நம் மனநிலையைப் பொறுத்தே செயல்படுகிறோம் என்பதுதான் நிதர்சனமான உண்மை என்பதுதானே நிஜம்.

''அருளமுதம்'' பதினேழு கட்டுரைகள் அடங்கிய மிக அருமையான புத்தகம். ஒவ்வொரு கட்டுரையிலும், நம் வாழ்விற்கு மட்டுமன்று, அப்போதைக்கு, அப்போது மாறும் மனநிலையிலுள்ள நம் மனதை, எண்ணங்களை, சரியான, நேரான வழியில் அழைத்துச் செல்லும், வழிகாட்டி.

எத்தனையோ நேரங்களில், நம் மனதின் எண்ணங்களின் தொந்தரவுகளினால், நம்மை நாமே அடக்கிக்கொள்ளும் திறனின்றி, எங்கே வழி? எங்கே நிம்மதி? என்று நம் மனம் அலைவதை நம்மால், ஆம்... நம்மாலேயே தடுக்க முடிவதில்லையே... இதை யாராலும் மறுக்க முடியாது. அப்படி மறுப்பவர்கள், வேண்டுமென்றே... தன்னை உள்ளடக்கி, வெளியே திறமையாகப் பேசுபவராகயிருக்க வேண்டும். ஆனால், அன்னையை வணங்கும் நம் மனம், உண்மையில், அவருடைய கோட்பாடுகளில் சில... சிலவற்றை மட்டுமே கடைப்பிடித்துப் பார்த்தால், நமக்கு நாமே வியத்தகு நிகழ்வுகளைக் கண்டு ஆச்சரியம் ஏற்படும். இது உண்மை.

நம்முடைய மனதை அடக்க முடியாதபடி, நம்மால் ஒரு முக்கியமான ஒன்றை செய்யமுடியாதபடி, மனம் அலையும்போது... அன்னையின் எதிரில் உட்காருங்கள். அலையும் மனது, பேரலைகளை எழுப்பும். சீறும், உறுமும்... ம்... ஹூம். நம்மால் அடக்க முடியவில்லையே என நினைக்காமல், அன்னையைமட்டும் மனதிலிறுத்தி, தொடர்ந்து நாம் அன்னையையே நினைப்போம். மனதின் குழப்பங்கள், வலிகள், வேதனைகள்... எதுவானாலும் சரி, தானாகவே சரிந்து, சரிந்து, நம்மை விட்டு விலகியே போய்விடும். இது நிதரிசனம்.



எப்போதும், தினமும் நாம் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும், ஊதுவத்தி ஏற்றி வணங்கி, தியானம் செய்தாலும், நம் மனம், அன்னையோடு நெகிழ்ந்து, உருகிப்போகும் நிலை, சிற்சில சந்தர்ப்பங்களில்தான் முடிகிறது. தினந்தோறும், நம் மனதையடக்கி, அன்னையை நினைப்பதை மட்டுமே செய்து வந்தால் நிச்சயம் தியானத்தை... தியானமாக நம்மால் செய்ய முடியும்.

'அருளமுதத்தில்' பக்தனின் வாழ்வில், அன்னையின் பிரத்யட்சப் பலன் மிக அருமையான, ஒவ்வொன்றும் நம் மன இயல்பை அப்படியே அப்பட்டமாகக் கூறி, அதற்கான வழிமுறைகளும் கூறுவதாக உள்ளதாகும்.

நாம் புத்தகங்களைப் படிக்கலாம். நம் வாழ்க்கையில் வரும் சந்தர்ப்பங்களுக்கேற்ப படித்ததை, செயல்படுத்தலாம். ஆனால், அந்த செயல்படுதல் என்பது, நம் மனதின் உள்ளே, அன்னையின் முழு ஆக்ரமிப்பையும் கொண்டுவர வேண்டும். அன்னை ஆக்ரமிக்கும் இடத்தில் வேறு எதுவுமே நுழைய முடியாது. அப்படியொரு சக்தியை நம் மனதிற்குள்ளேயே சுழலவிடும் பக்குவம் நமக்கு வரவேண்டும். அதற்கு... நம்முடைய பக்தியும், பிரார்த்தனையும்தான் மிகச் சிறந்த வழி.

அன்னையை வழிபடும் நாம், நம் மனதையும் சரியான வழியில் நடத்த முயல வேண்டும். எப்போதுமே நம்முடைய மனது, ''நான் செய்தது சரி. மற்றவர் செய்வதுதான் தவறு'' என்றுதான் தயக்கமில்லாமல் கூறும்; நினைக்கும். இது மனித இயல்பு. அதை நாம் உணர்ந்து சரிவர நடக்க, நம்மை நாமே திருத்திக்கொள்ள, கடினமாகச் செயல்பட வேண்டியது நம் கடமையேதான். சிறுக, சிறுக சேர்த்தால்தானே, ஒரு பெரிய 'முதல்' (பணம்) நமக்குக் கிடைக்கிறது. அது போல, சிறுக, சிறுக நம்மை நாமே, தவற்றை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். அந்த திருத்தம் நம்மிடம் வளர, வளர, அன்னையும் நம்மிடம் நெருங்கி, நெருங்கி வருவார் என்பது சத்தியம்.

''அண்ணா... அப்பாங்கறவரை நாமே விரட்டிட்டோம். ஏன்னா அவர் பெரிய குடிகாரராயிருக்கிறது தெரிஞ்சு போச்சு. நிச்சயமா, நம்ப

அம்மா, அவரை ஏதோ காரணத்துக்காகத்தான் வீட்டை விட்டு வெளியேத்திட்டாங்கறது புரிஞ்சுக்க முடிஞ்சாலும், அது என்னன்னு தெரியலையேண்ணா. நமக்கு நினைவு தெரிஞ்ச நாளுலேருந்து 'அப்பா' நம்மகூடஇல்லே. நாமளும் இன்னிக்குவரை அவரைப்பத்தி யோசிக்கவுமில்லே, அம்மாவையும் கேட்டதில்லே. இப்போ... அப்பாவோட உண்மையான சொரூபம், விஸ்வரூபமா தெரிஞ்சு போச்சு. ஆனா, ஒரு சந்தேகம் கூடவே வரதுண்ணா. அம்மா, அப்பாவை விட்டு, விலக இந்த 'குடி' காரணமா? இல்லே அம்மா விலகினதால இந்த குடிக்கு அப்பா ஆளானாரா? புரியலேண்ணா... உனக்கு... ஏதாவது தெரியுமாண்ணா?''

இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த மாமி, நிதானமாய் எழுந்து வந்தாள்.

''ராமு, உனக்குப் புரியலே... அதே போல உங்கண்ணாவுக்கும் ஒண்ணும் தெரியாதுன்னு உனக்குத் தெரியாதா? தெரியாதுடா கண்ணா. ஆனா, எனக்கு எல்லாமே தெரியும்டா கண்ணுகளா. இப்பத்தான் உங்க ரெண்டு பேருக்கும் புரியற வயசு. அதனால உங்ககிட்டே எல்லாத்தையும் சொல்லிடறது நல்லது.

நடந்தது பூராவும், அவர்களுக்குப் புரியும்படிக் கூறினாள். அதுவும், 'குடி' என்பது எத்தனை பெரிய தவறு என்பதையும் கூடவே உணர வைத்த மாமியின் கண்கள் நிரம்பின. அதுவும் ராமுவை விற்கத் துணிந்த தந்தையின் குணம் அவர்களை கோபப்பட வைத்தது.

''பாவம் அம்மா, இல்லையாடா சீனு... இனிமே அம்மாவை, நாமளும் கஷ்டப்படுத்தக் கூடாதுடா. நாம நன்னா படிச்சு, பெரிய வேலைக்குப் போய், மாமி, அம்மா, கீதா சித்தி எல்லாரையும் ரெஸ்டெடுக்கச் சொல்லிட்டு, நாம சம்பாதிச்சுத் தரணும்டா... சரியா...''

தழுதழுத்தபடி சொல்லும் சீனுவையும், ராமுவையும், மாமி தன்னோடு சேர்த்து அணைத்தபடி... அவள் கண்களைத் திருப்பியது, அன்னை, ஸ்ரீ அரவிந்தரிடம்தான்.

''அன்னையே! உன்னுடைய சூழலில், உன்னுடைய கண்பார்வையில் வளரும், இந்த இரண்டு சிறார்களுக்கும் உன்னையும், ஸ்ரீ அரவிந்தரையும் தவிர யாரையும் தெய்வமாகத் தெரியாது. நீயே



இவர்களுக்குப் பொறுப்பாகயிருந்து, வழிநடத்த வேண்டுகிறேன். நல்லவைகளை அவர்களுக்குக் காண்பி. அல்லாதவைகளை அண்ட விடாமல் பார்த்துக் கொள் தாயே... அன்னையே சரணம்... அன்னையே சரணம்...'' வேண்டியவளின் இமைகள் மூட, சரணங்கள் அவளுள் சுழல ஆரம்பித்தது.

❀❀❀

காலங்களும் சுழல ஆரம்பித்ததில், இருவரும் படிப்பில் மிகமிக வேகமாக முன்னேறினார்கள். அதுவும் 'தந்தை' என்பவரின் கோலத்தைப் பார்த்ததிலிருந்து, படிப்பின் மேன்மையை உணர்ந்து, மனம் முழுவதும் படிக்கவேண்டும், படிக்கவேண்டும் என்னும் எண்ணம் மட்டுமே, மனதில் ஆணித்தரமாகப் பதிந்து, படிப்பையே தங்களது 'ஆஸ்தி'யாக நினைத்து, முக்கியத்துவத்தோடு படித்தார்கள். கூடவே, சாப்பாடு, அல்லது டிபன் எதுவானாலும், அவர்கள் பள்ளிக்குப் போகும் முன் அவர்களால் இயன்றளவு, அந்த வேலையையும் செய்தார்கள்.

இரண்டு வருடம் ஓடியே போனது துள்ளிக்கொண்டு. அதுவும் பார்வதி சமைக்கும் அந்த வீட்டுப் பெரியவர், இருவருக்குமே மிக நன்றாக பாடங்களைச் சொல்லித் தந்து, ஒவ்வொரு கேள்விக்கும், விரிவாக, அதே சமயம் சுருக்கமாக எழுத சொல்லிக் கொடுத்ததில் இருவரின் திறமைகளும் நன்றாகவே விகசித்தது.

சீனுவின் மார்க்குகளைப் பார்த்து, பார்வதியின் கண்களில் நீர் தளும்பல். அப்படியே மகனைக் கட்டி அணைத்து, அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் எதிரில் நிறுத்தினாள். கண்ணிமைகள் தானாகவே ஒன்று சேர்ந்தன. மனம், அன்னையிடமே சரணடைந்ததில், எந்தவிதமான வெளியுணர்வு அவளை அண்ட மறுத்து, ஒதுங்கியே போயின. எந்த வேண்டுதலுமில்லாமலே, நம்பிக்கையோடு வணங்கினாள்.

சீனுவுக்கு இன்ஜினியரிங் படிக்க வேண்டுமென்ற விருப்பம். அதற்கான மார்க்குகளும் வாங்கியிருந்தான். ஆனால் 'பணம்'தான் அவன் முன் நின்று பயமுறுத்தியது. அன்னையை மனமுருக வேண்டினான்.

''அன்னையே... எனக்குப் படிக்கணும். நிறைய படிக்கணும்.

ஆனா... ஆசைக்குத் தகுந்த பணமில்லையே... நிச்சயமாய் எனக்கு ஏதாவதொரு வழியைக் காட்டும்மா. நிச்சயம் எனக்கு நல்லது செய்வீர்கள். அந்த நம்பிக்கை எனக்குள்ளே நிறைய இருக்கும்மா... உங்கள் சரணம்தான் அம்மா நிச்சயம் எனக்கு வழிகாட்டும். காட்டுவீர்கள் என்கிற நம்பிக்கையோடுதாம்மா இன்ஜீனியருக்கு படிக்க, அந்த காலேஜுக்கு 'அப்ளிகேஷன்' போட்டுருக்கேன். இது என் விருப்பம். ஆனால்... உங்கள் விருப்பம் எதுவானாலும் ஏற்றுக் கொள்ளும் மனதோடுதாம்மாயிருக்கிறேன். சரணம்... அன்னையே சரணம்... அன்னையே சரணம்..."

மனதில் ஒரு தெளிவும், அமைதியும், மெல்ல, மெல்ல புகுந்தது. தைர்யம் தானாக உள்ளே நுழைந்து மண்டியிட்டது.

அன்னையைப் பார்த்து, சந்தோஷமாக சிரித்தான்.

"தேங்க்யூ மதர்", "தேங்க்யூ மதர்", "தேங்க்யூ மதர்" என மூன்று முறை கூறி வணங்கியவன், சிரித்த முகத்துடன் திரும்பினான் உற்சாகமாய்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சலனம் மேல்நிலையில் நம்மை நிறுத்துகிறது. எண்ணமோ, உணர்வோ அசைந்தால் அது சலனம். சலனமற்ற நிலை ஆழத்திற்கு நம்மை இட்டுச்செல்லும்.

***ஆழம் நாடும் அமைதி.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# குரு - சிஷ்யன்

காருகுரிச்சி அருணாசலம் ராஜரத்தினம் பிள்ளை சிஷ்யன். குரு மதுரைக்கு வந்திருக்கிறாரென செய்தி வந்தால், காருகுரிச்சி எழுந்து நிற்பார். முதலாளியிடம் போனில் பேசும் மானேஜர் எழுந்து நின்று பேசுபவரும் உண்டு. இது மரியாதையின் கடைசி கட்டம்.

நாம் ஏற்கும் கருத்தை மனம் ஏற்கிறது - அது நம்பிக்கை தரும், தெளிவு.
அதையே உணர்ச்சி ஏற்றால் பக்தி ஏற்படும் - மரியாதை எழும்.

அதை உயிரும் ஏற்றால் நம்பிக்கை ஆழ்ந்து ஜீவனையும் உடலையும் தொடும்.
அந்த நிலையில் உடல் தன்னையறியாமல் மரியாதை செலுத்தும்.
இது கற்பு நெறியின் உச்சி; சிகரம்.

சத்தியஜீவியம் மேலுலகிலிருந்து இறங்கி வந்தால் முதலில் நம் மனம் ஏற்கும்.
அப்பொழுது தலையுள் பொன்னொளி தியானத்தில் தெரியும்.
பொன்னொளி பகவான் சமாதியானபின் அவர் உடலில் இறங்கியது.
அது நடக்க வேண்டும்என்று பகவான் தன் பூத உடலை நீத்தார்.
தியானத்தில் வெள்ளொளி தெரிவதுண்டு. பொன்னொளியும் தெரியும்.
பொன்னொளி உடலுள் நுழைந்தால் அது கிரீம் கலராக மாறும்.

காருகுரிச்சியின் சிஷ்ய பாவம் பூரண யோகத்தில் சரணாகதி பலிக்க உதவும்.
நாதஸ்வர குரு T.N.ராஜரத்தினம் பிள்ளை ஆன்மீகக் குருவில்லை.
ஆன்மீகக் குரு தருவது ஞான ஒளி. வெண்மையாக இருக்கும்.
பொன்னொளி சத்தியஜீவிய ஒளி.
அதுவும் உடல்வரை பாயுமானால் அவருக்குச் சரணாகதி பலித்தது எனப் பொருள்.
அவர் நினைத்தது (at one level) நினைத்தவுடனே நடப்பதைக் காணலாம்.

❀ ❀ ❀

# ஜே. கிருஷ்ணமூர்த்தி JK

13 பிள்ளைகள் பெற்ற தகப்பனாருக்கு 10வது பிள்ளையாக இவர் ஆந்திராவில் பிறந்தார். அன்னிபெசண்ட் கனவில் இது தெரிந்து அவர் வந்து இவரையும், இவருக்கு நேர் மூத்தவரையும் அழைத்து வந்து இங்கிலாந்தில் படிக்க வைத்தார். படிப்பு முடிந்து தியசாபிகல் சொஸைட்டி வந்து சேர்ந்ததும் இவர் World Teacher ஜகத்குருஎன காண்பவர் அறிந்தனர். உலகெங்கு-மிருந்து இவருக்கு பணம் பல திசைகளினின்றும் வந்தது. 1930இல் அப்படி இவர் பெற்றது 6 கோடி ரூபாய். இவர் பணத்தை ஏற்கவில்லை. திருப்பிக் கொடுத்துவிட்டார். அன்றிலிருந்து 95 வயது வரை உலகைச் சுற்றி வந்து சொற்பொழிவாற்றினார்.

✡ ***இவர் எந்த மதத்தையும் சார்ந்தவரில்லை. ஆன்மீகவாதி. ஆன்மீக சக்தியுள்ள இடத்தை நோக்கிச் செல்வம் வரும்.***

நாமெல்லாம் எளிய அன்பர்கள். பெரிய ஆத்மாக்கள் பெற்றதை நாம் பெற முடியுமாஎன்பது அன்பர்கள் ஐயம். பாண்டி மகாராஜா பெரியவர். நாம் எளியவர். ஆனால் இன்றைய விஷயங்கள் - போன் பேசுவது, காரில் போவது - அன்றைய மகாராஜாக்களுக்கில்லாத வசதி இன்று சாமானியனுக்குண்டு. அன்றிருந்த ரிஷிகள் பெறாத ஆன்மீக பாக்கியத்தை அன்னை நமக்களிக்கிறார். அன்று எந்த மகாராஜாவும் கர்மத்திற்குக் கட்டுப்பட்டவர். இன்று எந்த அன்பனையும் கர்மம் பாதிக்காது.

✡ **நாம் அன்னையைமட்டும் பாராட்டினால் ஆன்மீகம் பலிக்கும். அப்படிப் பலிக்கும்பொழுது JK வாழ்வில் நடந்தவை அன்பர் வாழ்வில் நடக்கும்.**

✡ **அன்னையை ஏற்பது வேறு, அன்னையைமட்டும் ஏற்பது வேறு.**

✡ **அன்னையை ஏற்பது அருள் பெறுவது. அன்னையைமட்டும் ஏற்பது அருளுக்கு உற்பத்தி ஸ்தானமாக இருப்பது.**

❀ ❀ ❀

September 2009 Jiviyam 15 Malar 5
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள் ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

SATYA JYOTHI ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191